இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 20 திகதி: 28.10.2018 விலை : 20.00

## யாழ் மறைமாவட்ட இறைமக்களின் எளிமையான விசுவாசம் என்னைப் பெரிதும் கவர்ந்தது

### மகாகல்கமுவ புனித யோசவ்வாஸ் தேசிய திருத்தல பரிபாலகர் அருட்பணி அலெக்ஸ்



யாழ் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளுக்கு புனித யோசவ் வாஸ் அடிகளின் அற்புதச் சிலுவை கடந்த 18 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை எடுத்துச்செல்லப்பட்டபோது எல்லா இடங்களிலும் பெருந்திரளாக பக்தி ஆர்வத்தோடு கூடிவந்து திருச்சிலுவையை முத்திசெய்து ஆராதித்த யாழ். மறைமாவட்ட இறைமக்களின் எளிமையான விசுவாசத்தைக் கண்டு தான் ஆச்சரியப்பட்டதாக இதற்குப் பொறுப்பாக வந்த மகாகல்கமுவ தேசிய யோசவ் வாஸ் திருத்தல பரிபாலகர் அருட் பணி அலெக்ஸ் அடிகளார் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளை சிறப்பாக ஏற்பாடுசெய்தயாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுக்கும் மற்றும் திருச் சிலுவை சென்ற இடங்களில் அதனை பக்தி மயமாக வரவேற்று வழிபாடுகளை சிறப்பித்த பங்குத் தந்தையர்கள் மற்றும் துறவிகளுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

புனித யோசவ்வாஸ் அடிகளாரின் அற்புதச் சிலுவை கடந்த 23ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்திற்கு கையளிக்கப்படுவதற்கு முன்னதாக இரணைமாநகரில் நடைபெற்ற இறுதித் திருப்பலியின் பின்னர் உரையாற்றிய அருட் பணி அலெக்ஸ் அடிகளார் மேலும் கூறுகையில் புனித யோசவ்வாஸ் அடிகளாரில் யாழ் மறைமாவட்ட மக்கள் கொண்டிருக்கின்ற பற்றும் வணக்கமும் இந்நிகழ்வில் தெளிவாக வெளிப்பட்டதாகவும் குறிப் பாக குருக்கள், துறவியரின் ஈடுபாடான பங்களிப்பு தன்னைக் கவர்ந்தாகவும் தெரிவித்தார்.

கல்கமுவவில் அமைக்கப்படுகின்ற புனித யோசவ்வாஸ் தேசிய திருத்தலத்தின் கட்டுமானப் பணிகளுக்கு இறைமக்கள் கொடுத்த காணிக்கை பயன்படுத்தப்படும் என்று தெரிவித்த அவர் இத் திருத்தலத்திற்கு யாத்திரை வருமாறும் இறை மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

புனித யோசவ்வாஸ் அடிகளின் அற்புதச் சிலுவையானது வெள்ளாங்குளம் பகுதியிலுள்ள யாழ் மன்னார் மறை மாவட்ட எல்லையில் வைத்து யாழ். மறை மாவட்டக் குரு முதல்வர் அருட் கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரால் மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு இம் மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை அவர்களிடம் கையளிக்கப் பட்டது.


## ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் புதிய பங்குப் பணிமனை



ஊறணி புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பங்குப் பணிமனை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளாரால் 14.10.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஊறணி பங்குத்தந்தை அருட்பணி தேவராஜன் அடிகளார், யாழ் மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்பணி நேசநாயகம், அடிகளார் மற்றும் குருக்கள், அருட் சகோதரிகள், பங்கு மக்களென பலரும் கலந்து சிறப்பித்தார்கள். இப்பங்குப் பணிமனை 28 வருடங்களின் பின்பு இங்கு புதிதாக அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சக்கோட்டைப் பங்கில் இளையோர் தினம்



பருத்தித்துறை சக்கோட்டை பங்கு இளையோரினால் இளையோர் ஆண்டினை சிறப்பிக்கும் முகமாக பொலிகண்டி குழந்தை இயேசு ஆலயத்தில் இரத்ததான முகாமும், மரம் நடுகை விழாவும் சிறப்பான நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி கான்ஸ்போவர் அடிகளாரின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் பருத்தித்துறை மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய காப்பாளர் அருட்பணி. மைக்டொனால்ட் அடிகளாரும் இணைந்து கொண்டார்.

## அவுஸ்திரேலியா ஐயோனா கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு வருகை



அவுஸ்திரேலியா பிறிஸ் பேனில் (Brisbane) அமைந் துள்ள ஐயோனா (Iona) கல்லூ ரியிலிருந்து அதன் அதிபர், ஆசிரி யர்கள், மாணவர்கள் ஆகி யோர் அண்மையில் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு வருகை தந்தனர். புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராக 18 ஆண்டுகள் அரும்பணி புரிந்த அருட்பணி லோங் அடிகளாரால் மேற்படி கல்லூரி அவுஸ்தி ரேலியாவில் 1958 இல் ஆரம் பிக்கப்பட்டது.

புனித பத்திரிசியார் கல்லூரி நுழைவாயிலிருந்து மேற்படி கல் லூரி சமூகத்தினர் பாண்ட் வாத்திய இசையோடு வரவேற்கப்பட்டனர்.

வரவேற்பு நிகழ்வில் ஐயோனா கல்லூரி அதிபர் சிறப்புரை ஆற்றுகையில் தமது ஐயோனா கல்லூரியின் ஸ்தாபகரான அருட்பணி லோங் அடிகளார் புனித பத்திரிசியார் கல்லூரியில் 18 வருடங்கள் அதிபராக அரும்பணியாற்றினார் எனவும், புனித பத்திரிசியார் கல்லூரியில் கால்பதித்தது தங்களுக்கு கிடைத்த பெரும்பேறு எனவும் குறிப்பிட்டார்.

அவர் தன்வசம் இருந்த அருட்பணி லோங் அடிகளாரின் குரல் பதிக்கப்பட்ட குறுகிய ஒலிப் பதிவை தனது கையடக்க

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சைக்கான ஆயத்த வகுப்புகள்

யாழ் கத்தோலிக்க ஆசிரிய சங்கத்தினரால் இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சைக்கான ஆயத்த வகுப்புக்கள் 2018.11.03 ஆம் திகதி தொடக்கம் பரீட்சை நடைபெற இருக்கும் திகதி வரை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிப் பரீட்சையில் தோற்ற இருக்கின்ற குருக்கள், துறவிகள் மற்றும் பொது நிலையினர் இவ்வகுப்பில் கலந்து பயனடைய அழைக்கப்படுகின்றனர்.

யாழ் மறைக்கல்வி நிலைய அனுசரணையுடன் யாழ் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் மேற்படி வகுப்புகளை ஒழுங்கமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களிடையே பாரபட்சம் காட்டவேண்டாம்

### கத்தோலிக்க ஆசிரியர் தினத்தில் குருமுதல்வர்

யாழ் மறைமாவட்டக் கத் தோலிக்க ஆசிரியர் தின ஒன்று கூடல் யாழ் மறைக்கல்வி நடு நிலையத்தில் 14.10.2018 அன்று இயக்குனர் அருட்பணி அ.பெ. பெனற் அடிகளாரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆசிரியர்களுக் கான சிறப்புத் திருப்பலியை யாழ் மரியன்னை பேராலயத்தில் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி A.P.திருமகன் அடிகளார் தலைமையேற்று ஒப்புக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஒன்றுகூடல் நிகழ் விற்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட்கலா நிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தமது உரையில் அதிபர்கள் ஆசிரியர்கள்மாணவர்களிடையே பாரபட்சம் காட்டக்கூடாது எனக் கேட்டுக் கொண்டார்.





குருமுதல்வர் தமது உரையில் ஆசிரியர்களால் சில மாணவர்கள் முன்னுரிமைப்படுத்தபட்டும், சிலர் புறக்கணிக்கப்பட்டும் நடந்து கொள்ளும் நிலை இருப்பின் அது மாணவர்களுக்கு உளப்பாங்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். எமது திருத்தந்தை அவர்கள் ஆசிரியர்களுக்காக எழுதிய சுற்று மடலில் இயேசு கூறிய அழகான வார்த்தையை சுட்டிக் காட்டுகின்றார். "உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்தினால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் அவ்வாறு செய்கிறார்களே". இவ்வாறு ஆசிரியர்களும் தங்களுக்கு விருப்பமான மாணவர்களில் கூடிய கவனம் எடுப்பதால் என்ன பலன்? கத்தோலிக்க ஆசிரியர்கள் எந்தப் பாடத்துறை சார்ந்தவர்களாக இருப்பினும் பாரபட்சமின்றி...

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# எமது எண்ணம்

## விடைதராது விடை பெறுதியோ...

ஐந்து வருடங்களாக தமிழர் தாயகத்தில் வீற்றிருந்த வடக்கு மாகாணசபை 24.10.2018 நள்ளிரவுடன் கலைந்து சென்றது. இலவுகாத்த கிளிகளும் பறந்து போயின. ஐந்து வருடங்களுக்கு முன் வடக்கு மாகாண சபை மலர்ந்த போது தமிழர்களுக்கு ஒரு தனியரசு மலர்ந்துவிட்ட இறுமாப்புடனும் எதிர்பார்ப்புடனும், தமிழ் நெஞ்சங்கள் இதனை வரவேற்று, முடிசூட்டி, செங்கோல் கொடுத்து, மகிழ்ச்சியில் திளைத்தது. எல்லோர் மனங்களிலும் பல அபிலாஷைகள் நிழலாடியது. அது நிஜமாகிவிடாமல் நிழலாகவே மறைந்தமை தமிழர் மனங்களில் மீண்டும் ஒரு ஏமாற்றத்தை அல்ல தோல்வியைத்தான் பதிவு செய்துள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஈழத்தமிழர்கள் தனித்துவமான மொழியையும், கலை பண்பாடுகளையும், கலாசாரத்தையும், நிலபுலங்களையும், பல்வேறு வளங்களையும் கொண்ட தனித்துவமான மக்களினம். வெறும் மந்தைக் கூட்டங்களாக மேய்க்கப்படவேண்டிய நாடோடிகள் அல்ல. புத்திஜீவிகள், அரசியல் வல்லுநர்கள் என தம்மை அழைத்துக்கொள்வோரால், இனங்காட்டுவோரால் கைத்தடியுடன் வழிகாட்டப்படுகின்ற பொம்மைகளுமல்ல. அரசியல் கண்ணோட்டத்தில் அல்லது அரசியல் அகராதியில் மக்கள் என்பது ஒரு தேசிய இனத்தைக் குறிக்கும் பதமாகும். இத்தகைய தேசிய இனம் மதிப்பார்ந்த அங்கீகாரம் பெற்ற தேசிய வாழ்வை பெறும் போதுதான் தனக்குரிய அடையாளத்தை நிலைநாட்டி முகவரியை தொலைக்காமல் வரலாற்று வெள்ளத்தில் நீச்சல் போட முடியும். ஆனால் இவ்வாறானதொரு நிலையை தமிழ் மக்கள் இன்னமும் அடையவில்லை என்பது துரதிஸ்டவசமானது.

பன்னெடுங்காலமாக ஈழத்தமிழர்கள் மத்தியில் எழுச்சி கொண்ட பல அரசியல் கோரிக்கைகள் தோல்விகளைத் தழுவி நின்றன. " ஐம்பதுக்கு ஐம்பது", "சமஷ்டி முறை", "தமிழ் மொழிக்கான சம அந்தஸ்து", "சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல்", "தமிழீழக் கோரிக்கை" எனப் பல கோரிக்கைகளும் போராட்டங்களும் எழுந்து அனைத்தும் தோல்வியைத் தழுவின என்பதற்குப் பதில் மௌனித்து விட்டது என்பதே பொருத்தமானது.

இத்தகைய சூழ்நிலையில் தான் இலங்கையின் இரண்டாவது குடியரசு யாப்பில் (1978) மேற்கொள்ளப்பட்ட 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்திற்கு அமைவாக இலங்கையில் மாகாண சபைகள் நிறுவப்பட்டு அவற்றுக்கு குறிக்கப்பட்ட அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டு அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய அதிகாரப் பரவலாக்கம் 2013 ஆம் ஆண்டு வரை தமிழர்களாகிய எமக்கு எட்டாக் கனியாகவே இருந்தது. ஆனால் கைக்கெட்டியதும் வாய்க்கெட்டாத நிலையில் அதன் கதை இன்று முடிந்துள்ளது.

முள்ளிவாய்க்கால் பெருந்துயரத்துக்கான காரணங்கள் தமிழர்களின் கடந்த ஒரு நூற்றாண்டு கால அரசியலில் விரவிக் கிடக்கின்றது. முள்ளிவாய்க்கால் பெருந்துயரம் தமிழ் மக்களுக்கு எதனைப் போதிக்கின்றது? இத்தகைய சிந்தனைப் பின்புலம் இல்லாது வாக்குவேட்டை நடத்தி அற்பத்தனமான சுய இலாபம் கருதும் தான்தோன்றித்தனமான தலைவர்களால் ஆளப்பட்டு வந்த மாகாண சபையும், அதை கரங்கொடுத்து தாங்கி நின்ற கட்சிகளும், தலைமைத்துவங்களும் இதுவரை தமிழ் மக்களுக்காக சாதித்தது என்ன என்ற வினாவுக்கு விடை தராது வடக்கு மாகாண சபை விடை பெற்றுள்ளது.

அற்பத்தனமான சுய இலாபம் கருதும் தான்தோன்றித்தனமான அரசியல் எல்லா சமூகங்களிலும் எல்லாக் காலங்களிலும் இருப்பது இயல்பு. ஆனால் வரலாற்றுப் பெருவெள்ளம் பெருக்கெடுக்கும்போது இவையெல்லாம் அப்பெருவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விடும். எமக்குக் கிடைத்த நல்ல அரசியல் சந்தர்ப்பங்களை எமது தனிப்பட்ட சுய நலன்களுக்காகவும், குரோதங்களை வெற்றி கொள்வதற்காகவும், கட்சி பேதங்களுக்காகவும் பயன்படுத்துவோமாக இருந்தால் பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல வலிகளைச் சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கும் எமது தாயகத் தமிழ் மக்களுக்கு நாம் துரோகம் இழைத்தவர்களாகவே வரலாற்றில் பதியப்படுவோம். ஏன்? பதிந்தே விட்டோம்.

இவை அத்தனைக்கும் காரணம் ஒற்றுமையின்மை என்னும் ஒற்றைச் சொல் நமக்கிடையே மலிந்து கிடப்பதால் தான் நாம் நலிவடைந்து போகின்றோம். எமது உரிமைகள், சுயாட்சி மற்றும் வாழ்வாதாரம், காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியற் கைதிகள், காணி அபகரிப்பு போன்ற விடயங்கள் தகர்த் தெறியப்படுவதற்கும் கவனிப் பாரற்று செயலிழந்துபோவதற்கும் நமக்கிடையே இருக்கும் ஒற்றுமையற்ற பலவீனம் எம்மை இன்னுமொரு முள்ளிவாய்க்காலுக்கு அழைத்துச் செல்லப் போகின்றதுஎன்பதே நிதர்சனம். காலவோட்டத்தில் அடித்துச் செல்லப்படும் இனமாக எம்மினத்தை நட்டாற்றில் கைவிட வேண்டாமென எமது அரசியல் தலைமைகளுக்கு அவசரவேண்டுகோள் விடுக்கின்றோம். இன்று தமிழ் மக்களாகிய எமக்கு கட்சிகளும் அவற்றை காத்து தமக்கு இலாபமீட்டும் தலைமைத்துவங்களும் தேவையில்லை. பிரிவினைகளை வளர்ப்பதன் மூலம் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என நினைப்பது பெரும் தவறாகும். அதற்குப் பதிலாக ஒற்றுமையுடன் செயற்படுவதே சுயநிர்ணயத்துடன் நாம் வாழும் உரிமையை எமக்குப் பெற்றுத்தரும்.

"நீதியின் மேல் பசிதாகம் உள்ளோர் பேறுபெற்றோர்" என்ற கிறிஸ்து இயேசுவின் மலைப் பொழிவு எமது தலைமைகள் மீது மழையாகப் பொழிந்து அவர்களை நன்நெறிப்படுத்தி நின்று நீதியுடன் கூடிய சுயநிர்ணய உரிமைகளை எமக்குப் பெற்றுத்தரவேண்டுமென யாசித்து நிற்கின்றோம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# மறைபரப்புப்பணி ஞாயிறு - திருத்தந்தையின் உரை

பிற இளையோர் வழியே தங்கள் வாழ்வின் மகிழ்வையும் பொருளையும் இயேசுவில் கண்டுகொண்ட இளையோரைக் குறித்து, மறைபரப்புப்பணி ஞாயிறன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் உரை நிகழ்த்தினார்.

எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் சிறப்பிக்கப்படவிருக்கும் உலக இளையோர் நாள் நிகழ்வுகள், தற்போது வத்திக்கானில் இளையோரை மையப்படுத்தி நடைபெற்றுவரும் உலக ஆயர்கள் மாமன்றம் ஆகியவை இளையோர் துணையுடன் நற்செய்தி அறிவிக்கப்படுவதைக் குறித்து எடுத்துரைக்கின்றன என்று திருத்தந்தை தனது உரையில் மேலும் கூறினார்.

நற்செய்தி அறிவிக்கும் பணிக்கென தங்கள் சொந்த நாடுகளைவிட்டு, வெளிநாடுகளில் வாழும் மறைபரப்புப்பணியாளர்களை நன்றியோடு எண்ணிப் பார்த்து அவர்களுக்காக அருள் நிறை மரியே என்ற செபத்தை செபிக்குமாறு திருத்தந்தை தன் உரையில் அழைப்பு விடுத்தார்.

இயேசுவின் சீடர்களான யாக்கோபும், யோவானும் இயேசுவுக்கு அருகே இருபுறமும் அமர்வதற்கு இடம் கேட்ட நிகழ்வு நற்செய்தியில் இடம்பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை இவ்வுலகம் மகுடங்களைத் தேடிக் கொண்டிருக்கும் வேளையில் சிலுவையை மகுடமாகவும், தன் உயிரை பிறருக்குவழங்கு வதை வாழ்வின் நோக்கமாகவும் இயேசு முன்வைத்தார் என்று கூறினார்.

இயேசுவின் சீடராக வாழ விரும்புவோர் மனம் திரும்புவதற்கு நற்செய்தி விடுக்கும் அழைப்பை ஏற்று எளி-யோருள் எளியோராக மாறி பணிபுரிய வேண்டும் என்ற அழைப்பையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் உரையில் முன்வைத்தார்.

# இயேசுவின் பாடுகளை இதயத்தில் கொண்டு இளையோர் வளர வேண்டும் - திருத்தந்தை



பரிவுடன் பேசுதல், கண்டனம் செய்யாமல் செவிமடுத்தல், கருணையுடன் வரவேற்றல் என்ற குணங்களைக் கொண்ட அருட்பணியாளர்கள் இன்றைய திருஅவைக்குத் தேவைப்படுகிறார்கள் என திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

Passionist துறவு சபையின் பொது அமர்வில் கலந்துகொண்ட ஏறத்தாழ 100 அங்கத்தினர்களை திருப்பீடத்தில் சந்தித்து உரை வழங்கிய திருத்தந்தைபிரான்சிஸ் அவர்கள், அச்சபையினர் மேற்கொள்வதற்கென பரிந்துரைக்கப்பட்டிருக்கும் புதிய பாதை குறித்து தன் பாராட்டுக்களை வெளியிட்டார்.

இளைய தலைமுறைக்கு நெருக்கமாக இருக்கும் வகையில் திட்டங்களை தீட்டியுள்ளது குறித்தும், தினசரி வாழ்வின் அனுபவங்கள் வழியாக துறவு சமூகத்திற்கு பயிற்சி வழங்குவது குறித்தும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மறைப்பணியை புதுப்பித்தல், நன்றியுணர்வு, இறைவாக்குரைத்தல், நம்பிக்கை என்று இப்பொது அவைக் கூட்டத்திற்கு எடுக்கப்பட்ட தலைப்பு பொருத்தமானது என்றும் கூறினார்.

இயேசுவின் பாடுகள் உங்கள் இதயங்களில் என்றும் இருக்கட்டும் என இச்சபையைத் தோற்றுவித்த சிலுவையின் புனித பவுல் எடுத்தியம்பிய வார்த்தைகளையும் மேற்கோள்காட்டி உரையாற்றிய திருத்தந்தை, இன்றைய காலத்தில் தூய ஆவியாரின் செயல்பாடுகளையும், இருப்பையும் உணர்ந்தவர்களாக, காலத்தின் அறிகுறிகளை கண்டுகொள்ள முயல்வோம் என்ற அழைப்பையும் முன்வைத்தார்.

கடவுளைத் தேடிக்கொண்டேயிருக்கும் இன்றையை இளைய சமுதாயத்திற்கு இயேசுவின் பாடுகள் மற்றும் இறைவன் அவர்களை தனிப்பட்ட விதத்தில் இறுதிவரை அன்பு கூருகிறார் என்பதை கற்றுக் கொடுப்பதன் மூலம் ஊக்கம் மற்றும் நம்பிக்கையின் ஆதாரமாக அவர்களை வாழ்விக்க முடியும் என Passionist துறவு சபையினரிடம் திருத்தந்தை மேலும் தெரிவித்துள்ளார்.

# அருள் நிறை மரியே வாழ்க
## திருத்தந்தையின் தொலைக்காட்சித் தொடர்

"அருள் நிறை மரியே வாழ்க" செபத்தைக் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களை Tv2000 தொலைக்காட்சி ஒரு புதியதொலைக்காட்சித்தொடராகவெளியிட்டுள்ளது.


நாம் அனைவரும் பிரதிபலிக்கக் கூடிய ஒரு வாழ்வை இளம்பெண் மரியா வாழ்ந்தார் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்தாலியில் இயங்கிவரும் Tv2000 என்ற தொலைக்காட்சி நிறுவனமும், தகவல் தொடர்பு திருப்பீட அவையும் இணைந்து Ave Maria அதாவது "மரியாவே வாழ்க" என்ற பெயரில் உருவாக்கியுள்ள ஒரு தொலைக்காட்சித் தொடரின் முதல் பகுதியில் கூறியுள்ளார்.

அன்னை மரியாவைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில் குழந்தைகளுக்கே உரிய வியப்பு என்ற பண்பை நாம் கொண்டிருக்கவேண்டும் என்று கூறும் திருத்தந்தை, இன்றைய உலகில் மெதுவாகத் தொலைந்துவரும் இந்த வியப்பை திருஅவை மீண்டும் தேடி கண்டுபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதற்கு முன், Tv2000 தொலைக்காட்சியில் "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே" என்ற செபத்திற்கு திருத்தந்தை வழங்கிய விளக்கங்கள் ஒரு தொலைக்காட்சித் தொடராக வெளிவந்தன.

அதனைத் தொடர்ந்து, "அருள் நிறை மரியே வாழ்க" செபத்தைக் குறித்து திருத்தந்தை வெளியிட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்து இப்புதியத் தொலைக்காட்சித் தொடர் வெளியாகிறது.

பதுவை நகரின் சிறையில் ஆன்மீகப் பணியாளராக உழைத்துவரும் அருட்பணி மார்கோ போத்சா (Marco Pozza) அவர்களுடன் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொள்ளும் ஒரு கலந்துரையாடலிலிருந்து, 11 ஒரு நிமிடத் தொகுப்புகளாக உருவாக்கப்பட்டுள்ள இத்தொடரின் முதல் பகுதி ஒக்ரோபர் 16 ஆம் திகதி ஒளிபரப்பப்பட்டது.




ஒவ்வொரு செவ்வாய் இரவும் ஒரு நிமிடத் தொகுப்பாக வெளிவரும் இத்தொடரின் இறுதியில், டிசம்பர் 23ம் திகதி திருத்தந்தையின் முழுமையான நேர்காணல் ஒளிபரப்பாகும் என்று Tv2000 தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் அருள்பணி போத்சா அவர்கள் மேற்கொண்ட நேர்காணல் "Ave Maria" என்ற தலைப்பில், இத்தாலிய மொழியில் ஒரு நூலாக அக்டோபர் 9 ஆம் திகதி வெளியானது.

இந்நூலின் ஆங்கிலப் பதிப்பு 2019 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமைப்பணியின் 6 ஆம் ஆண்டு நிறைவு நாளன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


# புனித யோசவ்வாஸ் அடிகளாரின் திருச்சிலுவை எம் மறைமாவட்டத்தில் பயணித்தவேளை...


திருமலை மறைமாவட்டத்திலிருந்து திருச்சிலுவையை குரு முதல்வர் பெற்றுக்கொள்கையில்...


அளம்பில் பங்குத்தந்தை ஆசீர் வழங்குகையில்...



முல்லைத்தீவு ஆலயத்திற்கு எடுத்து வருகையில்...


புதுக்குடியிருப்புப் பங்கில் திருச்சிலுவை வருகையில்...


யாழ். ஆயர் ஆசீர் வழங்கும்போது...


பரந்தன் செபமாலை கன்னியர் மடத்தில் அருட் சகோதரிகள் ஆராதி செய்கையில்...


பருத்தித்துறை பங்கில் திருச்சிலுவை


சுன்னாகப் பங்கில் திருச்சிலுவை


மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்திலிருந்து திருச்சிலுவை செல்கையில் ...


உரும்பிராய்ப் பங்கில் திருச்சிலுவை பவனியாக அழைத்து வருகையில் ...


சாவகச்சேரிப் பங்கில் திருச்சிலுவை பவனியாக நாதஸ்வர இசையுடன் அழைத்து வருகையில்...


பருத்தித்துறை மறைக்கோட்ட குருக்களும், மகா சுகமுவ திருச்சிலுவை பவனிக்குழுவுடன்


யாழ். பேராலய வளாகத்துக்குள் திருச்சிலுவை வருகையில்...


பாஷையூர்ப் பங்கில் திருச்சிலுவை பவனியாக இளையோரின் நாட்டிய இசையுடன் அழைத்து வருகையில்...


திருச்சிலுவை யாழ். மறைமாவட்ட குருமுதல்வரினால் மன்னார் மறைமாவட்ட ஆயரிடம் வெள்ளாங்குளத்தில் கையளிக்கையில்...


யாழ். மறைமாவட்டக் குருக்களும், மன்னார் மறைமாவட்டக் குருக்களும்

# சாவகச்சேரிப் பங்கில் வானதூதர்களின் பீடப்பணியாளர் தினம்

சாவகச்சேரி பங்கு புனித லிகோரியார் பீடப் பணியாளர்கள் தங்கள் பெயர் கொண்ட புனிதர்களாம் வானதூதர்களின் தினத்தை அண்மையில் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

காலைத் திருப்பலியை முன்னின்று சிறப்பித்த பீடப்பணியாளர்கள் மாலையில் ஒரு சிறிய ஒன்றுகூடலையும் நடாத்தினார்கள். இவ்வொன்றுகூடல் பீடப்பணியாளர்களின் தலைவர் செல்வி ந. நிதர்சினியின் தலைமையில் நடைபெற்றது.

ஆலய அருட்பணிச்சபையின் முன்னாள் பொருளாளர் திரு ச.யேசுதாசன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க ஆலய அருட்பணிச் சபையின் செயலர் திருமதி புஸ்பா சாந்தகுமார் சிறப்புவிருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

ஆலயத்தில் இயங்கும் பக்திச் சபைகளின் பிரதிநிதிகளும் இவ்வொன்றுகூடலில் கலந்து கொண்டார்கள். தலைவர் தமது தலைமை உரையில் பீடப்பணியாளர்களாகிய நாம் ஆண்டவரின் பிரசன்னமாகவுள்ள திருப்பீடத்துக்கு மிக அருகில் நின்று பணிசெய்வது எமக்குக் கிடைத்த பேறு என்றும், இப்பணியைச் செய்வதில்நாம் மகிழ்ச்சி அடைகின்றோம் என்றும் கூறினார். பீடப்பணியாளர்களின் செயலர் செல்வன் ஜோ.ஜொறிங்ஸ்ரன் தமது வருடாந்த அறிக்கையில் தமது பணிகளைக் கூறி நின்றார். திருப்பலி வழிபாடுகளின்போது பீடத்தில் செய்யும் பணிகளுக்கு அப்பால் தமது குடியிருப்பைத் தூய்மையாக வைத்திருக்கும் நோக்குடன் மாதம் ஒரு முறை அங்கும் இங்கும் எறியப்பட்டிருக்கும் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் போத்தல்கள பேணிகள் போன்றவற்றை ஒன்று சேர்ப்பதாகவும், அண்மையில் தேசிய திருப்பாலத்துவ சபையால் வறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக பணம் சேகரிக்கப்பட்டபோது தாம் நிதியுதவி வழங்கியதாகவும் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினர் தமது உரையில் பீடப் பணியாளர்களையும் அவர்களது செயற்பாடுகளையும் வாழ்த்தி நின்றதோடு ஆலய வரலாற்றில் பீடப்பணியாளர்கள் தமது தினவிழாவைக் கொண்டாடுவது இதுவே முதல் முறை என்றும் கூறினார்.

சிறப்பு விருந்தினர் தமது உரையில் வானதூதர்கள் யார்? அவர்கள் என்ன செய்கிறார்கள்? என்று கூறி பீடப்பணியாளர்களையும் அவர்களைப் போன்று ஆண்டவர் திருமுன் பணிசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் பீடப்பணியாளர்களின் கலைநிகழ்வுகளும் விருந்துபசாரமும் நடைபெற்றது.

பங்குத் தந்தை அருட்பணி. ம.றெக்ஸ் சவுந்தரா அடிகளார் பீடப்பணியாளர்களுக்கு வழி காட்டியாக இருந்து வருவதுடன் மேற்படி நிகழ்வினை நெறிப்படுத்தி நின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**ஓ! கார்த்திகையே!** உன்னை எப்படி எங்களால் மறக்கமுடியும்?
கார்த்திகை என்றதும் கத்தோலிக்கர் மனதில் எழுமிரு நாட்கள்
– ஒன்றும் இரண்டுமாம்
சகல புனிதர்களின் நாளும், சகல ஆத்துமாக்கள் நாளும்
இவற்றுள் கார்த்திகை இரண்டு இதமான பல இனிய நினைவுகளை
அலை அலையாக எம் கண்முன்னே கொண்டுவந்து எம்முறவுகளை மீட்டும் நாளது

**ஓ! கார்த்திகையே!** உன்னை எப்படி எங்களால் மறக்கமுடியும்?
அன்றொரு நாள் எம்முறவுப்பாலத்தில் முடிச்சுப் போட்டு
வேராக, மரமாக, இலையாக, கொடியாக, பூவாக, காயாக, கனியாக
அதிபல விருட்சமாய் பாசத்தினையும், நேசத்தினையும், அன்பினையும்
அள்ளிப்பருகி, முகர்ந்து, குடித்து, சுவைத்து, பகிர்ந்து
எம்மன்புறவுகளாய் வாழ்ந்து, வாழவைத்து எம்மகத்தே இன்றில்லாது
இறைவனடி சேர்ந்துள்ள அனைத்து ஆன்மாக்களையும்
– நினைவு கூரும் மிகப்பெரிய நாளாகும்

**ஓ! கார்த்திகையே!** உன்னை எப்படி எங்களால் மறக்கமுடியும்?
உலகளாவிய ரீதியில் கத்தோலிக்க திருஅவையானவள்
எமக்குத்தந்த அதியுன்னத நாள், அனைவரும் ஒன்றுகூடி செபிக்கும் நாள்
எம்மைவிட்டு பிரிந்து சென்ற அனைத்து உறவுகளும்
ஆழ்ந்த அமைதியில் துயில் கொள்ளும் உறைவிடத்தை
எம்மவரைத் தியானிக்க வைக்கும் தியான இல்லத்தை
எமது வாழ்வை அலசி ஆராயச்செய்யும் ஆராய்ச்சிக் கூடத்தை




பற்பல கலைகள், பல்வேறுபட்ட வாழ்க்கை வாழ்ந்து
இறுதியில் சுவாசித்த மூச்சு நின்று ஆறடி மண்ணுக்குள்
அடங்கும் ஆழ்ந்த மயானத்தை நினைவுகூரும் நாளது

**ஓ! கார்த்திகையே!** உன்னை எப்படி எங்களால் மறக்கமுடியும்?
உயிர்பிரியும் வரை காத்திருந்து, உயிரற்ற உடலைத் தரிசிக்காது
உயிருள்ள பொழுதே உறவுகளை மதித்து மன்னித்து
அரவணைத்து அன்பு செய்து, அவர்களைத் தரிசித்து
நேசித்து வாழும் ஒரு புனித வாழ்க்கையை எம்மிறைவன் விரும்புவார்.
போலியான உறவுகளைத் தகர்த்தெறிந்து, உண்மைக்கும்
நீதிக்கும் சாட்சி பகரும் வாழ்வை, எம்வல்ல தேவன் நேசிப்பார்
என கார்த்திகை இரண்டு எம்மனைவர்க்கும் எடுத்தியம்பும்

**ஓ! கார்த்திகையே!** உன்னை எப்படி எங்களால் மறக்கமுடியும்?
அனைத்து ஆத்துமாக்களையும் அன்புடன் நினைவுகூர்ந்து
அவர்கள் ஆன்ம ஈடேற்றத்திற்காய் நாம் செபிப்போம் – இன்று
எம்மை நினைத்து ஏனையவர்கள் செபிப்பார்கள் – நாளை
சங்கிலித் தொடராக தொடரட்டும் எம்முறவு மலரட்டும் எம்வாழ்வு
இறையுறவில் எமதான்மா இனிதே சங்கமமாகட்டும்
**கார்த்திகை இரண்டே!** உன்னை நான் நேசிக்கின்றேன்...
ஏனெனில் என்னை இம்மண்ணகத்திற்கு கொண்டுவந்ததும்
நீதானே, **ஓ கார்த்திகை இரண்டே**

அருட்சகோதரி லொறன்சியா லோறன்ஸ்
திருச்சிலுவைக் கன்னியர் சபை
கொழும்பு - 07

# இறந்தோரின் கல்லறைகள் வாழ்வோரின் கருவறைகள்

**இலையுதிர் காலம் என்பது மரணம் அல்ல**
**இன்னொரு துளிர்ப்புக்கான தொடக்கம்**
**அஸ்தமனம் என்பது மறைவு அல்ல**
**இன்னொரு உதயத்திற்கான பதுக்கம்....**
*(கவிஞர் வைரமுத்து)*

நாம் கார்த்திகை மாதத்தில் அனைத்து ஆன்மாக்களினதும் தினத்தை நினைவுகூர்ந்து நன்றியுணர்வோடு கடைப்பிடிக்கின்றோம். மக்கள் இத் தினத்தை கல்லறை விழா எனவும் சொல்வதுண்டு. பண்டைய காலத்தில் உரோமையர்களின் சிந்தனைகளின் பிரகாரம் கல்லறைகள், சேமக்காலை இறந்தவர்களின் நகரம் எனக் கருதப்பட்டது. அதே கின்ற நிகழ்வு அல்ல. மாறாக உண்மை, அன்பு, சகோதரத்துவம் எனும் இறையாட்சி விழுமியங்களைக் கட்டியெழுப்பும் கல்வெட்டுக்கள், காப்பியங்களாக மிளிர்கிறது. இன்று இருந்து விட்டு நாளை இடிந்துவிடுகின்ற மணல் வீடல்ல நமது வாழ்வு. வாழ்வு நிலைத்திருக்கும், நிஜமானது. ஏனெனில் இயேசுவில் நம்பிக்கை கொள்வோர் என்றுமே வாழ்வர்.

உண்மைக் கிறிஸ்தவனின் வாழ்வில் இறப்பு ஒரு மாற்றமே தவிர, அழிவு அல்ல. "உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்

வேளை அன்றைய கிறிஸ்தவர்களுக்கு இவ்விடம் வாழ்வோரின் நகரமாக விளங்கியது. இன்று அக்கல்லறைகளுக்கு வாழ்வோராகிய நாம் எடுக்கும் இந்த நினைவு நாள் நமது வாழ்வு முடிவுற்ற திருப்பயணம்

**வன்னிவாழ் இதயம்**
**ம. சூசைமுத்து**

என்பதை தெளிவுபடுத்துகிறது.

இறைவன் நமக்கு வழங்கிய அருங்கொடையாகிய வாழ்வு சேமக்காலையில் அடக்கம் செய்வதோடு முடிந்து விடு

விசுவாசம் கொள்பவன் ஒருபோதும் சாகான்" (யோவான் 11:28) ஆண்டவரில் விசுவாசம் கொள்பவன் இறந்தாலும் புதிய வாழ்வைப் பெறுகிறானே தவிர அவன் ஒருபோதும் அழிவதில்லை. குறுகிய கால வாழ்வை நிறை வாழ்வாக அமைத்து தீமையை எதிர்த்துப் போராடுகின்ற மனிதனை ஆண்டவர் உடனே அழைத்துக் கொள்கிறார் என ஞானநூல் சான்று பகர்கின்றது.

(தொடர்ச்சி 09 ஆம் பக்கம்)

# உலகம் விரும்பாத உண்மை



## முகவுரை

இவ்வுலகம் எதை மறுத்தாலும் யாக்கைஎன்னும்இவ்வுடம்பின்நிலையாமையை மறுக்கத் தயாரில்லை. மதங்கள் போதிக்கின்றன, தத்துவங்கள் சொல்கின்றன என்பவற்றைக் கடந்து மரணத்தின் நிச்சயத் தன்மையை மானுடம் நம்புவதற்குக் காரணம் அது ஓர் உயிரின் அனுபவம். நேற்றிருந்தவன் இன்றில்லை! இன்றிருப்பவன் நாளை இல்லை! என்ற யதார்த்தம் எந்த மனிதனுக்கும் நிச்சயமான உண்மை. அதனால்தான் நவீன மனிதன் எதைச் சாதித்தாலும் மரணத்தின் மீது வீழ்ந்த முடிச்சை மட்டும் அவிழ்க்கவே முடியாது என்ற ஏகோபித்த ... கசப்பான முடிவுடன் மானுடம் பயணிக்கிறது. இந்நிலையில் சாவின் பின்னும் ஒரு வாழ்வு உண்டு என்ற கிறிஸ்தவ செய்தியே மனிதனுக்கு மரணத்தின் மீதான எதிர்மறையான தோற்றப்பாட்டை நிராகரித்து, இவ்வுலகு - மறுஉலகம் சார்ந்த வாழ்வுக்கு அர்த்தம் கற்பிக்கிறது. மரணத்திற்கு மனிதர்களை தயார் செய்யும் பின்னூட்டல் சக்தியாக அமைகிறது. கிறிஸ்துவே அவ்வல்லமை. அவரே அந்த சக்தி. இதை விவிலிய ஒளியில் ஆராய்வதே இவ் ஆக்கத்தின் நோக்கமாகும்.

## ஏன் இந்த இறந்தோர் தினம்?

எல்லாக் கலாசாரங்களிலும் இறந்தோர் தினம் காணப்படுகிறது. ஏனென்றால், இதனால் தான் மரணம் இயல்பானதாகத் தோன்றினாலும் அது இலகுவாக எம்மால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதொன்றல்ல. இதனால் தான் இறந்தோரை நினைவு கூரும் நாட்கள், விழாக்கள், வழிபாடுகள் ஆசியக் கலாசாரத்திலே பரவலாகக் காணப்படுகின்றன. கிறிஸ்தவர்களுக்கு மரணமானது ஒரு இயற்கைச் சம்பவம் மாத்திரமல்ல. யோபு ஆகமம் 1:21 கூறுவது போல "என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியாய் யான் வந்தேன். அங்கே திரும்புகையில் பிறந்த மேனியாய் யான் செல்வேன். ஆண்டவர் அளித்தார் ஆண்டவர் எடுத்துக்கொண்டார். அவரது பெயர் போற்றப் பெறுக" என்ற பற்றற்ற மனப்பக்குவத்தோடு மட்டும் நின்றுவிடாது, நாமனைவரும் புதியதொரு வாழ்வுக்கு கடந்து செல்லும் ஊடகமாக மரணத்தை நற்செய்தி அறிவிக்கிறது.

## மரணத்திற்கு ஒரு புதிய பரிமாணம்

புதிய எற்பாட்டின் மையப்பொருளாகிய கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும் ஒரு புதிய விருப்பத் தேர்வை, புதிய பரிமாணத்தை, மரணத்திற்குக் கொடுக்கிறது. மரணத்திற்கு அப்பாலுள்ள வாழ்வு கிறிஸ்துவின் உயிர்ப்பு என்ற கொடையிலே, வாழ்வின் வேறொரு நிலையை அல்லது பரிமாணத்தை வெளிப்படுத்துகிறது. இது கிறிஸ்துவில் உயிர்பெற்று, மூவொரு கடவுளின் வாழ்வில் பங்குபற்றும் பேரழைப்பாக மாறுகிறது. பவுல் அப்போஸ்தலரின் மொழியில் "கண்ணால் காணமுடியாததும் மனித மரணத்திற்கு அப்பாற்பட்டதுமான ஒரு புதிய வாழ்வாகவும், புதிய யுகத்தின் பிறப்பாகவும், ஒரு புதிய உடலின் உயிர்ப்பாகவும்," திருவெளிப்பாடு கூறுகின்ற "புதிய வானம் புதிய பூமியாகவும்" சித்தரிக்கப்படுகிறது. இந்த அற்புதமான புதிய சகாப்தத்தின் நுழைவாயிலாக மரணமும் கல்லறையும் குறிகாட்டப்படுகின்றன.

## வாழ்வின் திறவுகோல்

புனிதர் ஒருவர் சிறந்ததோர் ஓவியனை அழைத்து மரணத்தை மக்களுக்கு தத்துரூபமாகச் சித்தரிக்கக் கூடிய ஒரு ஓவியத்தை வரைந்து கொண்டு வரும்படி கூறினார். அந்த ஓவியனும் சில நாட்கள் கழித்து மரணத்தை விளக்கக்கூடிய ஓவியத்துடன் வந்தான். அதில் மிகவும் வலிமையும் கொடூரமுமான ஒரு மனிதன் கையில் பெரிய கதாயுதமொன்றை வைத்திருந்தான். படத்திற்கான விளக்கத்தை கேட்டபொழுது, மரணம் என்பது மனிதன் நினைத்துப்பார்க்க முடியாத ஒரு கொடியவன். அவன் எவரையும் எவ்வேளையிலும் தாக்குவான் என்று ஓவியன் கூறினான். அப்பொழுது புனிதர் சிரித்துவிட்டு படத்திலுள்ள அந்த மனிதனின் கையிலிருந்த கதாயுதத்தை எடுத்துவிட்டு ஒரு திறவுகோலை வைக்கும்படி கூறினார். ஏனென்றால், நாம் நித்திய வாழ்வுக்குள் நுழைவதற்கான தங்கத் திறவு கோலே மரணம்.

## வாழ்வின் எல்லைகளுக்குள் நுழைய...

நித்திய வாழ்வானது, மூவொரு கடவுளின் வாழ்வில் பங்கு பற்றுவதாக அமைகிறது. இந்த மாபெரும் உண்மையை ஒரு புதிய தரிசனமாக பவுலடியார் 2கொரி 4:16 இல் "எங்கள் உடல் அழிந்து கொண்டிருந்தாலும் உள்ளார்ந்த உணர்வு நாளுக்குநாள் புதுப்பிக்கப்பெற்று வருகின்றது" என்றும், அழிவுக்குரியது அழியாமையை போர்த்துக் கொள்ளுவது என்ற நித்திய வாழ்வின் எல்லைகளுக்குள் நாம் நுழைவதாகவும் சித்தரிக்கின்றார்.

**மண்ணுக்குத் திரும்புவது**
**மனிதனின் மாண்பு அல்ல**
**மண்ணையே விண்ணகமாய்த் திருப்புவதே**
**மனிதனின் மாண்பு**
**கிறிஸ்துவுக்கு முன் சாவு இன்று**
**பல் பிடுங்கப்பட்ட கைதியாக**
**கூனிக்குறுகி நிற்கின்றது**
**எத்தனையோ பேருக்கு வாழ்வூட்டியவர்**
**எத்தனை காலம் தான் வாழ்விழந்து கிடக்க முடியும்?**

**அருட்பணி.மா.றேஜிஸ் இராசநாயகம்**

## புரட்சிகரக் கணம்

எனவே, இந்தப் பாரம்பரியமான இறந்தோரை நினைவு கூரும் தினமானது, இயற்கை உறவு நினைவுகளுக்கு அப்பால் கிறிஸ்துவில் நாம் கொள்ளும் புதிய மறுவாழ்வின் ஆசீர்வாதமாகவும், அதற்கு ஆயத்தமான, ஒடுக்கமான வழியில் பயணிக்கும் ஒரு மார்க்கமாகவும் எமக்கு முன் வைக்கப்பட்டிருக்கின்றது. இதையே சிலுவை தரும் வெற்றியாகவும் பவுலின் திருமுகங்கள் எம் எல்லோர்க்கும் எடுத்தியம்புகின்றன. துன்பங்கள் எல்லாம் அர்த்தம் பெற்று நிறைவு பெறும் புரட்சிகரக் கணமாகவும் மரணத்தை நோக்க எம்மைத் தூண்டுகின்றது. இந்த உண்மையையே ஓர் அறிஞர் "சாவைச் சந்திக்கும் போதாவது சாதாரண மனிதன் வாழ்வைப்பற்றிச் சிந்திக்கின்றான்" என்று கூறுகின்றார். ஆம், சாகப் பயந்தவன் பயந்தே சாவான்.

## உறவுகள் அழியுமா?

சாவைப் பற்றிய உணர்வோ, சாவுக்குப் பிற்பட்ட நிலைபற்றிய எண்ணமோ விலங்குகள் எவற்றிற்கும் இல்லை என்பது ஆய்வு செய்யப்பட்ட உண்மை. மனிதனுக்கு மட்டுமே சாவுபற்றிய உணர்வு உண்டு. இந்தச் சாவுபற்றிச் சிந்திக்கும்பொழுது, சாவின் பின்னர் ஏற்படப்போகும் நிலை பற்றிய பயமும் அங்கலாய்ப்புமே சாவுபற்றிய எண்ணத்தை கொடூரமாக்குகிறது. இந்தப் பயத்தையும் அங்கலாய்ப்பையும் இயேசு தனது சிலுவை மரணத்தால் எடுத்துவிட்டார். இயேசு தன் உயிர்ப்பின் மூலம் நம்முள் விதைத்த புதுவாழ்வு, நாம் எதிர்நோக்கியுள்ள நிறைவாழ்வுக்கு அடையாளமும் அச்சாரமுமாக இருக்கிறது. இதனால்தான் இறைவாக்கினர் எசாயா இறைவனோடு நம்மை ஒன்றிணைக்கும் இவ்வாழ்வை மகிழ்ச்சி நிறைந்த விருந்திற்கு ஒப்பிடுகின்றார். எனக்கு முன் சென்றவர்கள் கிறிஸ்து இயேசுவில் உயிர் வாழ்கின்றார்கள். நாமும் ஒரு நாள் அவர்களோடு இணைந்து கொள்வோம்.ஏனெனில், உறவுகள் என்றும் அழிவதில்லை. உறவுகள் புனிதமானவை. அவற்றை நாம் என்றும் மதிக்கவும், பேணிக்காக்கவும் வேண்டும். இறந்தோரை நினைவுகூர அழைக்கப்படும் நாம் ஒவ்வொருவரும் உலகம் விரும்பாத இந்த உண்மையாகிய சாவை சந்திக்கவும், அரவணைக்கவும் எம்மை எவ்வேளையிலும் தயாராக்கிக் கொள்வோம்.

## நிறைவாக...

இது ஆண்டவர் தந்த அழகிய உலகம். வாழ்க்கை என்பது அவரின் அன்புப் பரிசு. இதில் வாழ்பவர் கோடி, மறைந்தவர் கோடி, இனி வருபவர் கோடி. ஆக நாம் வாழும் இப்பூமி ஒரு கூடாரம். அதன் இயல்பு தற்காலிகமானது என்பது நம் அனுபவம். அந்த தற்காலிக பயணத்திலே ஊன் - உலக சார்ந்த செயல்களைக்கடந்து விண்ணோக்கிய வாழ்வு வாழ்ந்து முடிப்பதே இறைதிட்டம். இயேசுவின் கல்லறையும் மானிட கல்லறைகளும் சொல்லும் செய்தியும் இதுவே. எனவே, இறந்தவருக்கு வணக்கம் செய்து, வாழ்பவர்களை எச்சரிக்கும் சகல ஆத்துமாக்கள் தினத்தை புனிதமாய் எதிர்கொள்வோம்.

# சிலுவை புனிதமானது கிறிஸ்தவ வாழ்வோடு பின்னிப் பிணைந்தது.

**இ.அ.அமலரட்ணம்**

ஒவ்வொரு மதமும் தமது வழிபாட்டின் புனிதப் பொருளாக ஏதோ ஒரு பொருளை வைத்திருப்பதையும் பேணி வருவதையும் நாம் காண்கின்றோம். அவற்றை ஆலயங்களிலும், வழிபாட்டு மையங்களிலும் நிறுவி அதற்கு வணக்கம் செலுத்துவதையும் அதனைப் பிரதிஷ்டை செய்து வழிபாடுகள் செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றன. எமது கத்தோலிக்க மதத்தைப் பொறுத்தமட்டில் திருச்



சிலுவை ஒரு புனிதப் பொருளாக கருதப்படுவதோடு, நமது வாழ்வியலோடு நெருக்கமாகப் பேணுவதும் பாரம்பரியமாக கடைப்பிடிக்கப்படும் ஒன்றாகும். ஆலயங்களை அடையாளப்படுத்த சிலுவை நாட்டப்படுகின்றது. தான் கிறிஸ்தவன் என்று அடையாளப்படுத்த சிலுவை அணிவது, நெற்றியிலே சிலுவை அடையாளம் வரைவது போன்றவையும், மூவொரு கடவுளின் நாமத்திலே சிலுவை அடையாளம் வரைந்து வழிபாடுகளையும் நிகழ்வுகளையும் தொடங்குவது போன்றவற்றைக் குறிப்பிடலாம். திருச்சபையின் அடிப்படைச் செபமான சிலுவை அடையாளம் மிகச் சிறிய செபமாக இருந்தாலும் அதில் திருச்சபையின் அடிப்படைத் தத்துவங்கள் அடங்கியுள்ளன.

## சிலுவையின் பெருமை

"மனிதனின் மீட்புக்காக கல்வாரியில் கிறிஸ்து இறந்த சிலுவை அளவற்ற இரக்கமும், நிறைவும் கொண்ட மூவொரு இறைவனின் பேரன்புக்கான அடையாளமாகவும் அருட்கொடைகளின் அடையாளமாகவும் விளங்குகின்றது" என்று சிலுவையின் பெருமை பற்றி 2ம் வத்திக்கான் சங்க ஏடு கூறுகின்றது. மரத்தினால் செய்யப்பட்ட சிலுவை என்ற கருவியில் இறைமகன் இயேசு அறைந்து கொல்லப்பட்டார். இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன் சிலுவை அவமானத்தின் சின்னமாகவும், சாபத்தின் அடையாளமாகவும் கருதப்பட்டது. ஆனால் கிறிஸ்து சிலுவையில் மரணித்த பின் சிலுவையானது மனித குலத்தின் மீட்பினதும் வெற்றியினதும் சின்னமாகவும் உயிர்த்தெழுதலின் அடையாளமாகவும் மாறியது. "சிலுவையானது தீய வழியில் செல்பவர்களுக்கு முட்டாள்தனத்தின் அடையாளமாகவும், நீதியின் உண்மையின் வழியில் செல்பவர்களுக்கு கடவுளின் வல்லமையாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது. "சிலுவை பற்றிய செய்தி அழிந்து போகின்றவர்களுக்கு மடமையே, ஆனால் மீட்புப் பெறும் நமக்கோ கடவுளின் வல்லமை" (1 கொரி 1:18).

## சிலுவையின் மகிமை

மனித மீட்புக்குத் தேவையான வல்லமையும், ஞானமும் கல்வாரிச் சிலு-வையில் இருந்து தான் பெற்றுக் கொள்கிறோம். இயேசுவின் திருப்பெயரைச் சொல்லி நெற்றியிலும் நெஞ்சிலும் சிலுவை அடையாளம் வரைந்து விசுவாசத்தோடு செபிக்கும்போது கடவுள் தம் வல்லமையாலும், ஞானத்தாலும் எம்மை நிரப்பி எம்மைக் காத்துக் கொள்கின்றார். நமது முன்னோரும் இன்று வாழும் கிறிஸ்தவர்களும் வாழ்வின் துன்பங்களைச் சந்திக்கும்போது "ஆண்டவரே எங்களைக் காப்பாற்றும்" என்று நெற்றியில் சிலுவை வரைந்து தீமைகளை வென்றதோடு மட்டுமல்ல, நன்மைத்தனங்களைப் பெற்ற அனுபவங்களும் எமக்கு உண்டு. இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டார். அதன் பின் அவமானத்தின் சின்னமாக இருந்த சாதாரண சிலுவை மீட்பின் சின்னமாகவும், புனிதப் பொருளாகவும் மாறியது. சிலுவை தான் இயேசுவின் சிம்மாசனம். அதிலிருந்து தான் அவர் உலகம் முழுவதையும் தன்பால் ஈர்த்துக்கொண்டார். திருச்சிலுவை அடையாளம் அனைத்துத் தீமைகளிலிருந்தும் எம்மைப் பாதுகாக்கின்றது. சிலுவையின் வல்லமையால் சாத்தான் ஓடுகின்றான். தலையிலே சிலுவையை வைத்து செபிக்கின்ற போது நோயாளர் நலமடைகின்றனர். "சிலுவையே எனது ஒரே அடையாளம்" என்று புனித தோமஸ் அக்குவைனஸ்ும் "சிலுவை ஒன்றில் தான் எனது மீட்பு உள்ளது" என்று அருளாளர் எப்ராசியம்மாவும் "சிலுவை இறைவனின் வல்லமை" என்று திருத்தூதர் புனித பவுலும், "சிலுவையின் நிழலில் தான் கிறிஸ்தவ வாழ்வு பாதுகாப்பானது" என்று பல புனிதர்களும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

## சிலுவை கிறிஸ்தவனின் அடையாளம்

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் மீட்டைப் பெற்றுத்தந்த சிலுவை அவனுக்கு அடையாளமாக உள்ளது. இறைமகன் இயேசு அளவிட முடியாத துன்பங்களை அனுபவித்து அதிலே கொலை செய்யப்பட்டு அவமானத்தின் சின்னமான சிலுவையை மீட்பின் புனித சின்னமாக மாற்றினார். கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் தமது அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் சிலுவைத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். அதனால் தான் துன்பங்களைச் சந்திக்கின்ற போது ஏன் எனக்கு இந்த சிலுவை? என்று கேள்வி எழுப்புகின்றோம். "கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விட்டார்கள். (கலா. 5:24) திருமுழுக்குப் பெறும்போது ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவோடு சிவையில் அறையப்படுவதன் வழியாக இயேசுவின் சீடத்துவத்துக்கு சான்று பகர்ந்து வாழ அழைக்கப்படுகின்றான். இயேசுவின் புனிதமான சிலுவைக்கு எதிராக செயற்படுவோர் பற்றி கலாத்தியர் 3:18, 19 வசனங்கள் இவ்வாறு கூறுகின்றன. "கிறிஸ்துவின் புனித சிலுவைக்கு பகைவர்களாக நடப்போர் பலர் உள்ளனர். இவர்களைப் பற்றி மீண்டும் மீண்டும் உங்களிடம் கூறியுள்ளேன். இப்போது கண்ணீரோடு சொல்லுகின்றேன் அழிவே அவர்கள் முடிவு, வயிறே அவர்கள் தெய்வம், மானக்கேடே அவர்கள் பெருமை. அவர்கள் எண்ணுவதெல்லாம் மண்ணுலகைச் சார்ந்தவை பற்றியே". எனவே எமது குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, திருச்சபை வாழ்வு, பணி வாழ்வு போன்ற எல்லா இடங்களிலும் நாம் சந்திக்கும் சிலுவைகளுக்கு இறைமகன் இயேசுவுக்குள் வாழ்ந்து அடையாளமாக விளங்குவது எமது அழைத்தலாகும்.

## புனித யோசவ் வாஸின் வாழ்வில் திருச்சிலுவை

இலங்கையின் திருத்தூதர் புனித யோசவ் வாஸ் அடிகள் எமது மண்ணின் விசுவாசத்தைக் காக்க உயிரைப் பணயம் வைத்து பல இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில் கிறிஸ்துவின் சீடத்துவத்துக்குள் நின்று பணியாற்றினார். அவர் ஒரு திருச்சிலுவையை தம் வசம் எப்போதும் வைத்திருந்தது மட்டுமல்ல, அச் சிலுவை மீது அபார நம்பிக்கை கொண்டவராக வாழ்ந்தார். திருச்செபமாலை சொல்லும் இடங்களில் எல்லாம் திருச்சிலுவையுடன் பங்குபற்றுவதும், திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் இடங்களில் அதற்கு முதன்மை இடம் கொடுப்பதும் அவரது வழக்கமாக இருந்தது. பயங்கரமான காட்டு விலங்குகள் வசிக்கும் கானகத்தின் ஊடே பயணிக்கும்போது விலங்குகளால் ஆபத்து ஏற்பட்டவேளையில் திருச்சிலுவையை உயர்த்திப் பிடிக்க அவை பின் வாங்கிச் சென்ற நிகழ்வும், வரட்சியின் போது திருச்சிலுவையை மையத்திலே திருப்பீடத்தில் வைத்து முழந்தாள் படியிட்டு நம்பிக்கையோடு செபித்தபோது மழை பொழிந்த நிகழ்வும் திருச்சிலுவையின் வல்லமைக்கு சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும். புனித யோசவ் வாஸ் மகா கல்கமுவவில் நாட்டிய புனித திருச்சிலுவை இலங்கையின் 12 மறைமாவட்டங்களுக்கும் புனிதமாக எடுத்துச் செல்லப்படுகின்றது. யாழ் மறைமாவட்டத்தின் 6 மறைக் கோட்டங்களிலும் ஐப்பசி மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை 29 பங்குகளில் வணக்கத்துக்கும் மரியாதைக்கும் வைக்கப்பட்டு திருப்பலிகளும் வழிபாடுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வானது எமது வாழ்வில் திருச்சிலுவை மீது நாம் வைத்திருக்கும் பக்தியையும், மதிப்பையும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.



## நிறைவாக


எமது வாழ்வில் எல்லாவற்றிற்கும் மேலாக திருச்சிலுவையில் நம்பிக்கை வைத்து நமது இறையன்பை இயேசுவுக்காக ஆழப்படுத்தும்போது அவருக்கு முதன்மை இடம்கொடுக்கும் போது அவர் நம்மோடு இருந்து துன்பங்கள் நீங்க அருள் பாலிப்பார். சிலுவை தான் இறை ஆசீரின் உறைவிடம் என்ற ஆழமான நம்பிக்கையை வளர்த்திடவும் திருச்சிலுவை என்னும் பொக்கிஷத்தில் இருந்து இடைவிடாது இறை வல்லமையைப் பெற்றுக் கொள்ளவும் மன்றாடுவோம். "ஏனெனில் கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொள்வதற்கு மட்டுமல்ல அவருக்காக துன்பங்களை ஏற்பதற்கும் நீங்கள் அருள் பெற்றுள்ளீர்கள்" (பிலி. 1:29) என்ற இறைவார்த்தைக்கு அர்த்தம் கொடுப்போம். சிலுவையில் தான் மீட்பு என்ற சிந்தனையோடு வாழ்வை முன்னெடுப்போம்.

## தனித்து வாழும் மனிதன் தன்னிறைவு அடைவதில்லை.

கிறிஸ்துவ மதிப்பீடுகளில், மனித உறவு நிலைகள் முக்கிய இடம் வகிக்கின்றன. மனிதன் மனிதனோடு கொள்ளும் உறவு பல நிலைகளில் மாறுபடுகின்றது. குழுக்களோடும் தனி மனிதர்களோடும் உறவு கொள்ளுதல் என்பது கற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஓர் கலை. பிறருடன் நல்லுறவை ஏற்படுத்த விரும்புபவர்களுக்கு இறைமகன் இயேசு பின்பற்றிய வழிகாட்டுதல்கள்.

- இயேசு எப்போதும் உண்மையுடன் இருந்தார்.
- எல்லோருடனும் ஒத்திருந்தார்.
- எல்லோருக்கும் செவிமடுத்தார்.
- நம்பிக்கை இழந்தோருக்கு உறுதியூட்டினார்.
- பிறருடைய ஆலோசனையை வரவேற்றார்.
- ஒவ்வொருவரையும் அன்பு செய்தார்.
- தேவையானதை கேட்க தயங்காதவர்.
- அன்பிற்காய் தன்னையே தந்தவர்.
- தற்பெருமைக்காக அல்ல பிறர் நலனுக்காய் வாழ்ந்தார்.

## நாமும் புனிதராக...



தம் வாழ்வில் புண்ணியங்களை பயிற்சி செய்து வாழ்ந்தவர்களே புனிதர்கள். கடவுள் ஒரு முறை அனைத்துப் புனிதர்களுக்கும் ஒரு விழா ஏற்பாடு செய்தார். ஒரு குழுப் போட்டி அறிவிக்கப்பட்டது. அன்பு, இரக்கம், பொறுமை, சகிப்புத் தன்மை, இறை பற்று, தியாகம் என பல்வேறு குடையின் கீழ் புனிதர்கள் தங்களிடம் மேலோங்கிய புண்ணியங்களின் அடிப்படையில் அணிதிரண்டனர். ஆனால் ஒரே ஒரு அணிக்கு ஆட்கள் குறைவாக இருப்பதைக் கண்டு ஆண்டவர் அந்த அணி தோற்றுவிடும் என்று நினைத்தார். அது தான் நன்றியறிதல்.

போட்டிக்கான தலைப்பை ஆண்டவர் அறிவித்தார். புனிதராவதற்கான எளிய வழி எது? என்பதே தலைப்பு ஒவ்வொரு குழுவும் விறுவிறுப்பாக வாதங்களை வைத்தனர். இறுதியாக நன்றியறிதல் குழுவிலிருந்த இளம் புனிதர் வந்து இவ்வாறு சொன்னார், "ஆண்டவரே அன்பு செய்ய உம்மைப்போல் சிலுவையில் மரிக்கவேண்டும். இரக்கம் கொண்டால் அப்பம் பலுகச் செய்யவேண்டும். இறை பற்றுக்கொண்டால் நீண்டநேரம் செபிக்க வேண்டும். பொறுமையாய் இருக்க கசையடிகளைத் தாங்கவேண்டும். இவையெல்லாம் மிகவும் கடினமானவை. புனிதராக எளிய வழி வாழ்க்கையில் நடக்கும் அனைத்திற்கும் நன்றி. நன்றி என சொல்லிக்கொண்டு வாழ்வதே" என்றார். ஆண்டவர் சிரித்துக்கொண்டே அதை ஆமோதித்தார். வாழ்க்கையை இறைவன் கையிலிருந்து வரும் கொடையாக எண்ணி நன்றி சொல்லிக்கொண்டு வாழ்ந்தால் நாமும் புனிதராகலாம்.

# காவலன் கலசம்

*அன்பு நண்பா,*

உமது மனம் திறந்த கருத்துக்களை பகிர கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்துவது உனது முன்னேற்றத்துக்கான வழிகளாகும். அதனை பயன்படுத்தாது தன்னால் முடியாது என வெட்கம், பயம், அலட்சியம், தன்னம்பிக்கையின்மை என ஏதாவது ஒன்று உனது நண்பர்களை சூழ்ந்து மௌனித்து வாழ்வது இளமைக்கு தடையானது. அவற்றால் தாழ்வு சிக்கலுக்குள் மூழ்குவதாகவே உணர்ந் திருப்பாய் அல்லவா? இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்ற இறைவார்த்தையை எப்படி வெளிப்படுத்துவாய்.

எம்மை நாமே சுய ஆய்வுக்குள் ஆராய கிடைக்கும் சந்தர்ப்பங்கள் எமது தனி மையில், தியானங்களில், வழிபாட்டு நிலைகளில் எமது இளமை எப்படி கரைகிறது என சிந்திக்க கிடைத்த சந்தர்ப்பங்களை மீட்டுப்பார். எமது சக நண்பர்களின் முயற்சிகள், தேடல்கள், வயதுக்கு ஏற்றதான செயல்களில் ஈடுபடுவதை கண்டு வியந்த சந்தர்பங்கள் பலவாக இருக்கும் அல்லவா? அவற்றில் மகிழ்ந்த சூழல்களை எண்ணிப்பார்.

எனது வீட்டில் எனது முயற்சிகளால் என்ன முன்னேற்றங்கள் நடக்கின்றன? எனது முன்மாதிரியான செயல்கள் எவை? எதனை முன்னெடுக்கலாம்? என சிந்தித்தாலும் காலநிலை சூழல் சரிவரவில்லை என பல நண்பர்கள் கூற கேட்டிருப்பாய். வரட்சிக்காலம் சாட்டாகியது, வீட்டுப்பயிர் செய்வோம் என்றவர்கள் மழை பெய்தால் வெள்ளம் என சாட்டு கூறுவார்கள். இவர்களுடன் நீயும் இணைந்து விடாது எமது உணவுக்கு நாமே சிறு முயற்சி செய்தால் அதுவே ஆரம்பமாகலாம். உழைக்காதவன் உண்ணலாகாது என்றால் எமது முயற்சியும் முயலாதது எல்லாம் முடியாததே என்பதனால் சிறந்த முயற்சி மூலம் பசுமை காக்க இளமையை அழகாக்குவதுடன் இறைவனின் படைப்பில் நீயும் இணைந்து இறைவனின் படைப்பை அழகாக்கும் கருவியாக மாறு. இவை மூலம், பிறருக்கு நல்ல முன்மாதிரியாக வாழ்ந்து பிறருக்கு வார்த்தையால் அல்ல வாழ்வில் இளமையின் சிறப்பை வெளிப்படுத்தலாம் அல்லவா?

ஆலயம் செல்லும் இளையோர் வழிபாட்டிலும், விழாக்களிலும் முன்நின்று உழைத்தாலும் அவை சமூகத்திலும், குடும்பத்திலும், தன் வாழ்விலும் முன்மாதிரியாக வாழக்கிடைத்த சந்தர்ப்பங்கள் என நினைக்க வேண்டும். "இதை என் நினைவாக செய்யுங்கள் " என்ற இறைவார்த்தைக்கு முழு வடிவம் கொடுக்கும் இளையோரை தான் இன்று அனைவரும் எதிர்பார்க்கின்றனர். இதுவே கிறிஸ்து அவனாக அவளாக காணப்படும் சந்தர்ப்பங்களாகும் என்பதை உணர்வாயா? இளமையின் பலம் கொண்டு இன்ப உலகை அழகுபடுத்தும் சிற்பிகளாக மாறும் ஒவ்வொரு இளைஞருக்கும் முன்மாதிரியாக நீ வாழ வாழ்த்துகிறேன்.

உனது பதில்கண்டு தொடர்கிறேன்.

அன்புடன்
செ.யோசப்பாலா
உளச் சமூகச் சீராளன்

## மறைந்தும்... மறவாத....

கல்லறைப் பூக்களின்
கனவுகள் நனவாக
கண்ணீரில் கரையும்
காலங்களாக கரைந்துவிடாது
குறைகளைவிட நிறைகளையே
மீட்டுப் பார்க்கும்
மனத்தூய்மையுடன்
மரணித்தும்
மனதில் நிலைத்து
மறக்காமல் நினைவுகூரும்
நற்செயல்களால்
வாழ்ந்த வாழ்வுக்கு
நன்றியுடன்
நினைவகலா நல்
நினைவுகளாக
சிறுவர்கள் மனதில்
நிலைத்து வாழ
முன்மாதிரியான
செயல்களால்
முன்னோரின்
நற்பண்புகளை பகிர்ந்து
பரமனுக்கு நன்றிப் பூக்களை
காணிக்கையாக்கி
எம் வாழ்வாலும்
நற்செயல்களாலும்
இறந்தும் வாழும்
ஆத்மாக்களின்
ஆத்மா சாந்தி பெற
அன்பை பகிர்ந்து
ஆறுதல் கொடுப்போம்

செ.யோசப்பாலா

## இளையோர் காவியம் 16

நான் நடக்க முடியாத அப்பாவை
முள்ளிவாய்க்காலில் தூக்கிக் கொண்டு நடந்தபோது...
ஒரு இளைஞன் சொல்லுகிறான்
என்னுடைய அப்பன் என்றால்...
நான் இப்பவே மருந்து வைத்து
கொல்லியிருப்பேன் என்று!

உன் வாயில் நடக்கக்கூடாது
அப்படிப்பட்ட வார்த்தைகளின் பிரசவம்

நீ மனம் நோகச் செய்யும்
மனங்களில் இருந்து வருகின்ற கண்ணீர்
நெருப்பு

உன் வாழ்க்கைப் புத்தகத்தின்
நூலாசிரியர்கள் பெற்றோர்

நீ மதிக்காமல் நடக்கின்றபோது
உன் தலைக்கனம்
தலை குனியப்போகிற நாள் ஒதுக்கப்படுகிறது

பத்துக் கட்டளை மனிதர்களுக்கு
கடவுள் போட்ட வேலி

நீ கடக்க நினைக்கிறபோது
கிடைக்க இருப்பது வெற்றியல்ல தோல்வி

நீ கட்டுப்பாடுகளை மீறினால்
கட்டுப்பாடாது வருங்கால வீடு

உன் திட்டங்களை எல்லாம்
தவிடுபொடியாக்கும்
இயந்திரம் ஒழுக்கக்கேடு

பெற்றோர் உன் வாழ்க்கை கோபுரத்தில்
பொருத்தப்பட்ட இடிதாங்கி

இப்போது பெற்றோருக்கு பிள்ளைகள் அல்ல
வயோதிபர் மடங்களே சுமைதாங்கி

நீ பின்தொடராதே
கடந்துபோன சந்ததி விடுகின்ற தவறுகளை

உன் பெற்றோருக்கு வயோதிபமடமல்ல
மன வீட்டில்
அன்புமடம் கட்டு

நீ பெற்றோரை வெறுத்து விட்டு
எடுத்து வைக்கிற அடி
ஊதாரி மகனுக்கு விழுந்த இடி

காலம் நடந்த மனமாற்றம் அல்ல
உடனடி மனமாற்றம் தேவைப்படுகிறது
உனக்கு....

(தொடரும்....)

உயிரோவியன்

# அனைத்துப் புனிதர்கள் தினம் கார்த்திகை -01

இன்றைய நாளில் திருச்சபை அனைத்துப் புனிதர்களையும் நினைவுகூர்ந்து இறைவனைப் போற்று கிறது. நன்றி கூறுகிறது. புனிதர்கள் யார்? தங்களுடைய வாழ்வையும், பணியையும் இறைவனின் விருப்பத்துக் கேற்ப அமைத்துக்கொண்டவர்கள்தான் புனிதர்கள்.

புனிதர்கள், நம்மைப் போல காலத்திற்கும் இடத்திற்கும் உட்பட்டவர்கள். இவர்கள் எல்லாருக்கும் ஒரு தொடக்கம், ஒரு முடிவு இருக்கிறது. இவர்களுக்கென்று உடல் இருக்கிறது. உறவுகள் உள்ளன. ஊர் இருக்கிறது. இவர்கள் வேற்று கிரகத்திலிருந்து வந்தவர்கள் அல்ல. தங்களுக்கு கொடுக்கப்பட்ட வாழ்வில் அந்த வாழ்வுச் சூழலில் இவர்கள் உன்னதமான மாற்றங்கள் உருவாகக் காரணமாக இருந்திருக்கிறார்கள். இவர்களால் முடியும் என்றால் நம்மாலும் முடியும்.

புனிதர்கள் பலருக்கும் அடித்தள அனுபவம் (foundational experience) இருந்தது. நமக்கு அன்றாடம் நிகழ்பவையெல்லாம் அனுபவங்கள். ஆனால், என்றாவது ஒருநாள் நிகழ்ந்து, நம் வாழ்வையே முற்றிலும் மாற்றுகிறதே ஓர் அனுபவம் அதுதான் அடித்தள அனுபவம். இந்த அனுபவம் மோசேக்கு எரியும் முட்புதரிலும், எலியாவுக்கு வீசும் காற்றிலும், பவுலுக்கு தமஸ்கு நகர்ச் சாலையிலும், மகாத்மா காந்திக்கு பீட்டர்ஸ்பர்க் இரயில் பயணத்திலும், அன்னை தெரசாவுக்கு கொல்கொத்தா நகர் சேரியிலும் வந்தது. நம் அடித்தள அனுபவம் என்ன? என்று நாம் கேட்க வேண்டும்.



புனிதர்கள் யாரும் திரும்பிப் பார்க்கவில்லை (no turning back). தங்கள் அடித்தள அனுபவத்தின் விளைவாக வாழ்வில் அவர்கள் எடுத்த முடிவிலிருந்து திரும்பிச் செல்லவில்லை. எந்தப் பிரச்சினை வந்தாலும், எந்த இடர் வந்தாலும் அவர்கள் அதை எதிர்கொள்ள தயாராக இருந்தனர்.

இத்தகைய பண்புகள் நமக்கு இருந்தால் நாமும் புனிதர்களே. இந்த நாள் நமக்கு விடுக்கும் அழைப்பு புனிதம் என்பது உலகில் உள்ள எல்லோருக்குமான இறைவன் நமக்கு தரும் ஒரு சிறப்பான பொது அழைப்பாகும்.

இயேசுவின் வார்த்தையினை வாழ்வாக்கி, மலைப் பொழிவில் முன்மொழியப்பட்ட எட்டுப் பெறுபேறுகளையும் ஒருங்கே வெளிக்காட்டி, மகிழ்வித்து மகிழ்வுறும் நிறை வாழ்வு வாழும் இறை மனிதர்களாக புனிதர்கள் விளங்கு கிறார்கள். இவர்களோடு இணைந்து நாமும் இறைவனை மகிமைப்படுத்தி மகிழ்வுற முன்வருவோம். சமூகச் சீர்கேடு களைக் களைந்து சமூக மேம்பாட்டினைத் தோற்றுவிக் கும் உத்தமர்களின் வலைப்பின்னலை வலுப்படுத்த ஒன்றுகூடி அனைத்துப் புனிதர்கள் பெருவிழாவிற்கு அர்த்தம் காண்போம்.

# புனித அகுஸ்தீனாரின் சிந்தனையிலிருந்து....



அன்பு உங்களுக்குள் வளர ஆரம்பிக்கும்போது அழகும் வளர தொடங்குகின்றது.

நம்பிக்கை என்பது எதை நீங்கள் பார்க்கவில்லையோ அதை நம்புவது. அந்த நம்பிக்கையின் வெகுமதி என்பது எதை நம்பினீர்களோ அதை பார்ப்பது.

இந்த உலகம் ஒரு புத்தகம். யார் இதில் பயணம் செய்யவில்லையோ அவர்கள் இதன் ஒரு பக்கத்தை மட்டுமே படிக்கின்றார்கள்.

எல்லாம் கடவுளை சார்ந்தது என்பதைபோல் பிரார்த்தனை செய்யுங்கள். எல்லாம் உங்களை சார்ந்தது என்பதைபோல் செயலாற்றுங்கள்.

இரண்டு நண்பர்களுக்கிடையே மத்தியஸ்தம் செய்யாதீர்கள், ஒரு நண்பரை இழந்துவிடுவீர்கள். இதையே இரண்டு அந்நியர்க ளுக்கிடையே செய்யும்போது ஒரு நண்பரை பெறுவீர்கள்.

சொல்லப்பட்டவை கருத்துகள் மட்டுமே, உங்கள் அனுபவத்தின் மூலமே அதனுள் செல்ல வேண்டும்.

## சிந்திக்க ஓர் சித்திரம்



# காவலன் கலசம்



# என் கேள்விக்கென்ன பதில்!

03

## அருட்பணி. செ. அன்புராசா அமதி

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: நம்முடைய பல அரசியல் பிரதிநிதிகளுக்கு கொள்கைகளோ, 'கொண்விக்சன்'னோ இருப்பதாகத் தெரியவில்லை! இவர்களை நம்பி காலங்கள்தான் கடந்துபோகின்றது. இப்படியே போனால் எத்தனை ஆண்டுகள் போகப்போகின்றது?**

**பதில்:** பூனையில்லாத வீட்டில் எலிகளுக்குக் கொண்டாட்டம் எனப் பெரியவர்கள் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள். இதனையே, நம்முடைய அரசியல் சூழலுக்கு ஏற்ப நேரடியாகச் சொல்லவேண்டும் என்றால், புலியில்லாத நாட்டில் எலிகளுக்குக் கொண்டாட்டம் என்று சொல்லிவிடலாம் போல் தோன்றுகிறது. அவர்களை நம்பி முப்பதாண்டுகள் கடந்துபோனது! இவர்களை நம்பி ஒன்பதாண்டுகள்தான் கடந்திருக்கிறது! இன்னும் கடக்கவேண்டிய ஆண்டுகளை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள் ஆனந்தன்!

*(நிலா, கிளிநொச்சி)*

**கே: பல காதலர்கள் காதலில் தோல்வியடைந்துபோக முக்கிய காரணம் என்ன எனக் கூறமுடியுமா?**

**ப:** நிலா, ஒரு பெண்ணின் திருமணத்தில் அவளுடைய முன்னாள் காதலன் ஒருவன் கலந்துகொண்டான். அவனைப்பற்றி ஏற்கனவே அறிந்திருந்த பெண்வீட்டாரின் உறவினன் ஒருவன், "நீ யார்?" எனக் கேள்விக்கணை தொடுத்தான். அவனோ, "நான் 'செமி பயினலில '(Semi Final) வெளியேறி இருந்தேன். இப்போது 'பயினல்' (Final) பார்க்க வந்திருக்கிறேன்!" என மிக நிதானமாகக் கூறிநின்றான். காதல், பொதுவாக, உடல் வயப்பட்டது. அதனால்தான் ஒருவரின் ஆளுமையைப் பற்றிய அறிவில்லாமல், ஆளைப் பற்றிய தெளிவில்லாமல் 'கண்டதும் காதல் கொண்டதும் கோலம்' எனப் பலர் காதலிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இவ்வாறாகக் காதல் உருவாகினால், 'செமி பயினலு'க்குக்கூட தெரிவுசெய்யப்படாமல் முதல்ஆட்டத்திலேயேமோசமானதோல்வியோடு வெளியேற வேண்டிய நிலையேற்படும்! உடல், நிறம், அழகு போன்றவைகளால் ஏற்படும் கவர்ச்சி, காதலை விரைவில் காலாவதியாக்கிவிடும்! மனம், குணம் போன்ற அகப்பண்புகளால் உருவாகும் காதல் நின்று நிலைக்கும். இதனை யாரும் இப்போது கணக்கில் எடுப்பதாகத் தெரியவில்லை. கறள் பிடிச்சிருந்தாலும் பறவாயில்ல, கவர்ச்சியா இருந்தால் சரி! துருப் பிடிச்சிருந்தாலும் துலக்கமாக இருந்தால் சரி என்பது போலல்லவா இன்று பல இளையவர்கள் நடந்துகொள்கிறார்கள்!

*(மலர், மன்னார்)*

**கே: எல்லா இடங்களிலும் காசுகாசு என்று தானே கேட்கின்றார்கள்! ஏனைய இடங்களோடு சேர்த்து ஆலயங்களிலும், கோவில்களிலும் அடிக்கடி அறிவிக்கின்ற அறிவித்தல் அதுவாகத்தானே இருக்கின்றது? காரணம் என்ன?**

**ப:** மலர், 'காசேதான் கடவுளப்பா அந்தக் கடவுளுக்கும் அது தெரியுமப்பா...' என்றொரு பழைய பாடல் உண்டு. நீங்கள் சொல்வதைப் பார்க்க இப்பாடலின் கொள்கைதான் இன்று பல இடங்களிலும் பின்பற்றப்படுகிறதோ என்று சிந்திக்கத் தோன்றுகிறது. மேலும், காசநோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுபல ஆண்டுகளாயினும், இப்போது 'காசுநோய்' பரவலாகப் பரவிவருவது உங்களுக்குத் தெரியுமோ தெரியாது! அதன் தாக்கம் தான், இவ்வாறு அடிக்கடி காசுபற்றி அறிவிப்பதற்கான காரணமாக இருக்குமோ என எண்ணவும் தோன்றுகிறது! காசைக் காட்டினால்தான் காரியம் நடைபெறும் என்ற நிலைமைதான் எங்கும் நிலைக்கப் போகிறதோ? கொடுக்க வேண்டியதை, கொடுக்கக் கூடியதைக் கொடுங்கள், இல்லையென்றால் உயிரா போகப் போகிறது!

*(புவி, வடமராட்சி)*

**கே : இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் அதிகமான தமிழர்கள் சித்தியடைந்த காரணத்தால் அப்பரீட்சையை இரத்துச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் இரத்னாயக்க நாடாளுமன்றத்தில் சில கிழமைகளுக்கு முன் தெரிவித்திருக்கின்றார். இதுபற்றி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்திறக்கவே இல்லையே! ஏன்?**

**ப:** புவி, அவர்களுக்குத் தெரிந்தால்தானே அதுபற்றி அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசுவார்கள்!? மற்றையது, அவர்களுக்கு இன்று எத்தனை வேலைகள் உண்டு என உங்களுக்குத் தெரியுமா? வடபுலத்தில் நடைபெறும் பூப்புனித நீராட்டுவிழாக்கள், புதுமனைபுகும் விழாக்கள், கோவில் - ஆலயத் திருவிழாக்கள், மரணவீடு என எத்தனை நிகழ்வுகளில் ஒவ்வொரு நாளும் அவர்கள் பங்கேற்கவேண்டி இருக்கிறது! தமிழ்ப் பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்களில் நுண்கடன்களால் ஏற்படும் பாதிப்புக்களை நாடாளுமன்றத்தில் முதன்முதல் தெரிவித்தவர் ஒரு சகோதர மொழிபேசும் அமைச்சரே என்பதனையும் இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமாகும். இக்குறிப்புக்கள், நமது மக்களின் மிக முக்கியமான பிரச்சினைகள் குறித்து நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எத்தகைய அவதானத்தோடும் ஆர்வத்தோடும் இருக்கிறார்கள் என்பதற்கான அடையாளங்கள்!?

*(அமலா, வவுனியா)*

**கே: கணவன் மனைவி உறவு முன்னரைவிட இக்காலத்தில் அதிகமாக விரிசல் அடைந்துபோகின்றது. என்ன காரணம்?**

**ப:** பல காரணங்கள் உண்டு, அமலா. எனினும், பல சாதாரண குடும்பங்களில், கணவன் மனைவி உறவில் விரிசல்வர முதல் காரணியாகத் தற்காலத்தில் இருப்பது நுண்நிதிக் கடன்கள் என்று சொல்லலாம்! இவ் அவதானிப்பை ஆமோதிப்பது போல மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் இவ்வாண்டு 2018 தை மாதம் தொடக்கம் புரட்டாசி மாதத்திற்குள் முப்பத்தேழு (37) பெண்கள் தற்கொலை செய்துள்ளதோடு, நூற்றியறுபத்தி மூன்று (163) குடும்பங்கள் பிரிந்து வாழ்கின்றன என அம் மாவட்டத்தின் அரசியல் பிரமுகர் ஒருவர் கோடிட்டுக் காட்டியிருப்பதாக தேசிய நாளிதழ் ஒன்று கடந்த ஒருசில கிழமைகளுக்கு முன் சுட்டிக்காட்டி இருந்தது. இக்குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் நிலையைக் கொஞ்சம் எண்ணிப்பாருங்கள்! வடகிழக்கில் உள்ள குடும்பங்கள் சீர்குலைந்து, சீரழிந்து, சின்னாபின்னமாகிப் போகட்டும் என்பதற்காகவே நுண்நிதிக் கடன்களைக் கொடுக்கிறார்களோ என்ற சந்தேகம் எழுகிற அளவிற்கு இன்றைய நிலைமை மாறியிருக்கிறது!

*(சாளினி, யாழ்ப்பாணம்)*

**கே: கோவில்களில், ஆலயங்களில் திருநாள்களும் உற்சவங்களும் முடிந்ததும் கோவில்,ஆலய சூழல் குப்பை மேடாகக் காட்சி தருகின்றது. ஏன் இந்நிலை?**

**ப:** ஒருதடவை கொஞ்சம் பிரசித்தி பெற்ற ஒரு கோவில் திருவிழாவின் நிறைவுநாள் மாலைப்பொழுதில் சென்றிருந்தேன். வீதிகளில் வீசப்பட்டிருந்த குப்பைகளுக்கு மேலாகவே நடந்துசெல்ல வேண்டியிருந்தது! கொஞ்சமும் அக்கறையின்றி பலர் இவ்வாறு செயற்படுகிறார்கள். ஒருவர் ஓரிரு குப்பைகளைதான் வீசியெறிவார். ஆனால், ஆயிரக்கணக்கான மக்கள் கூடுகிற இடங்களில் ஒவ்வொருவரும் ஓரிரு குப்பைகளை வீசினால் நிலைமை என்னாகும் என பொதுமக்கள் சிந்திப்பதில்லை. மற்றயது, இக்குப்பைகளை போடுவதற்கான குப்பைத் தொட்டிகளை போதுமான அளவுக்குப் பொறுப்பானவர்கள் வைப்பதில்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். 'குப்பை போடுகிறார்கள்', 'குப்பை போடுகிறார்கள்' எனக் குற்றம் சாட்டுகிறார்களே தவிர குப்பைகளை சேர்க்கும் கூடைகளைக் கூடுதலாகப் பயன்பாட்டில் வைக்கவேண்டும் என்பதைப் பொறுப்பு வாய்ந்தவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அவ்வாறு வைக்கிறபோது மக்கள் படிப்படியாக பழக்கப்படுவார்கள். இல்லையென்றால், வீசிவிட்டுச் செல்லும் பிரச்சினைக்கு எக்காலத்திலும் விடைகாண முடியாது சாளினி!

*(ரதி, யாழ்ப்பாணம்)*

**கே: நாய்த்தொல்லை தாங்க முடிவதில்லையே! தீர்ப்பதற்கு வழியில்லையா?**

**ப:** ஆனந்தன், நாய்கள் இருக்கிறவரை நாய்த்தொல்லை தீராது ஆனந்தன்!

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsupக்கோ அனுப்பி வைக்கலாம்.**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

# போர் தொடுப்போம்



தலைப்பைப் பார்த்தவுடன் பயம், கலக்கம், கோபம், சந்தோசம் என பல்வேறு கோணங்களில் உங்கள் உணர்ச்சிகள் ஒன்றுசேர்ந்து இதய அறையில் வந்து மோதலாம். ஆனால் ஒன்றும் செய்ய இயலாது. போர் தான் இதற்கு ஒரே வழி. இது இன்றைய காலத்தின் தேவை. மீண்டும் ஒரு புரட்சித் தலைவன் வந்து விட்டானா? என்று எண்ணும் எண்ணம் கூட உங்களுக்கு வரலாம். நான் பேசுவது ஆயுதப்போர் பற்றியல்ல. அதைவிட சக்தி வாய்ந்த அறிவியற் போர் பற்றியே குறிப்பிடுகின்றேன்.

இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்து போர்! போர்! என அனைத்திற்கும் சாட்டுக் கூறினோம். இன்று சமூகத்தில் அரங்கேறும் கெடுபிடிகள் மற்றும் எம் கல்வியின் பின்தங்கிய நிலை என்பவற்றுக்கு போரின் விளைவுகளே காரணம் எனக் கூறுகின்றோம். இப்படி சாட்டுப் போக்கு கூறியே எம்மினத்தவரின் வாழ்வு சாவு வரை சென்று விட்டது. "இன்னும் எவ்வளவு காலம் தான் இப்படியே சொல்லிக் கொண்டிருப்பது? நடந்தது நடந்து விட்டது. இனிவரும் காலத்தையாவது வளமாக்குவோமே என்ற எண்ணம் எம்மில் பெரும்பாலானவரிடம் அறவே இல்லை. அரசியல், மருத்துவம், பாதுகாப்பு, சமயம் என நாம் அனைத்துத் துறைகளையும், அவை சார்ந்தோரையும் விமர்சிக்கின்றோம். ஏன் நானோ என் பிள்ளையோ ஒரு சிறந்த அரசியல் வாதியாக, மருத்துவராக, நீதிபதியாக, சட்டத்தரணியாக, மதகுருவாக, ஆசிரியராக, அதிபராக, நிர்வாக உத்தியோகத்தராக வந்து நாட்டை சீர்திருத்தக்கூடாதா என்று ஒருபோதாவது சிந்தித்ததுண்டா?

ஒரு காலத்தில் உயர்தரம் கற்றிருந்தாலே போதும் சிறந்த தொழில் வாய்ப்புக்கள் வலிய வந்து எம் கதவுகளைத் தட்டியது. இன்று கல்வியில் பட்டம் பெற்றவர்களே தம் வாழ்க்கை தொழிலுக்காக ஏங்கி நிற்கின்றார்கள். இந்நிலையில் அறிவியல் போர் தொடுத்து அறிவின் உச்சியில் நின்றுதான் எம்மால் எம் வாழ்க்கைப் பாதையில் வாழ்வாதாரம் நோக்கி நகர முடியும் என்ற பேருண்மை நிதர்சனமாகி உள்ளது. உங்கள் பேனா உங்களைப் புறக்கணியாதவரை கல்வியை நீங்கள் புறக்கணியாதீர்.

அறிவியலால் முடியாது என்பது இன்றைய நூற்றாண்டில் எதுவுமில்லை. இன்று கலாசார பிறழ்வுகள், பிரச்சினைகள் அனைத்திற்கும் பின்புலமாக இருக்கும் இளம் சமூகத்தில் வாழும் பெரும்பான்மையினரிடம் காணப்படும் அடிப்படைப் பிரச்சினை "கல்வியறிவின்மை" என்பதாகும்.

பெற்றோரிடம் "ஏன் பிள்ளையை பள்ளிக்கூடம் அனுப்பவில்லை" என்று கேட்டால் "அவனுக்கு படிப்பு ஏறேல அதுதான் கைவிட்டிட்டம்" என்கிறார்கள். ஆனால் அதே பிள்ளை இன்று வீதியில் வாள்களுடனும், போதைப் பொருட்களுடனும் வலம் வரும் போது பெற்றோர் அங்கலாய்க்கின்றனர். அன்று அப்பிள்ளைக்கு "ஏலாதது என்று எதுவுமே இல்லை, முயற்சி செய்துகொண்டே இரு" என்று உணர்த்தியிருந்தால் இன்று வாள் ஏந்தும் கை புத்தகம் ஏந்தியிருக்கும் அல்லவா? அன்று தோமஸ் அல்வா எடிசனின் ஆசிரியர் "உங்கள் பிள்ளைக்கு கல்வி ஏறாது, வேறு வழி பாருங்கள்" என எடிசனின் தாயாருக்கு கடிதம் கொடுத்து அனுப்பிய போது அவரது தாய் இன்றைய பெற்றோரைப் போல் இருந்திருந்தால் உலகம் இன்று இருளுக்குள் அல்லவா இருந்திருக்கும்?

எமது வாழ்வாதாரத்தை உயர்த்தவும், சமூக சீரழிவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் அறிவியல் போர் தொடுத்து வெற்றி பெறுவதே இன்று எமக்குள்ள ஒரே வழியாகும். துப் பாக்கிக்கு இல்லாத சக்தி எழுதுகோலுக்குண்டு.

அருட்சகோதரன். ஜே.ஜே.எமில்ரன்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

## காவலன் கலசம்



# செபித்துக் காட்டியவள் எம் செபமாலை தாய்...!

இதோ ஆண்டவனின் அடிமை! என்று இறை திட்டத்தை முழுமனதுடன் ஏற்று இறை விருப்பத்தை நிறைவேற்றியவள் தான் எம் மரியாள். அவளின் எளிமையான வாழ்க்கை முறையை நாம் சற்றுப் பின்நோக்கி பார்த்தோமேயானால் அவளின் வாழ்வு எமக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் உண்டுபண்ணும் என்பதில் ஐயமில்லை.

மரியாள் எந்நேரமும் இறை-வனை மகிமைப்படுத்திக் கொண்டே இருப்பாள். ஏழைகள் பால் அதிக அக்கறை உடையவளாய் திகழ்ந்தாள். பாவிகள், ஒடுக்கப்பட்டோர், கைவிடப்பட்டோர் இவர்களைத் தேடிச்சென்று அவர்களை இறைவன் பால் ஈர்த்துக்கொண்டாள். அவர்களுக்காக இறைதந்தையிடம் வேண்டினாள். அவர்களை அன்பு செய்து, அவர்கள் மேல் பரிவு கொண்டவள் எம் தாய். பிறரை தேடிச் சென்று அன்பு மழையில் நனைய வைத்தவள் எம் தாய். எலிசபெத்தம்மாளை சந்திக்க அவள் நெடுந்தூரம் பயணம் செய்தாள். அவள் மண ஒப்பந்தமான நிலையில் கருவுற்று இருப்பதாக வானதூதர் அறிவித்ததும் எவ்வளவு துன்பப்பட்டிருப்பாள். ஆனால், அவ்வாறு அவள் காட்டிக் கொள்ளவில்லை. இறைதிட்டம் எதுவோ அதை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் பணிவிற்கு வித்திட்டவள். அன்பு, இரக்கம், பொறுமை, பரிவு, கருணை, தாழ்ச்சி, பணிவு இவ்வாறு மரியாளின் புண்ணியங்களை, பொக்கிஷங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இவ்வளவு புண்ணியங்களையும் தன்னுள் இருத்தி அவ்வாறு வாழ்ந்து காட்டியவள் எம் அன்னை.

மரியாளுக்கு பிரியமானது "செப-மாலை" செபம் தான். பல இடங்களில் பலருக்கு காட்சியளித்த எம் தாய் கையில் செபமாலையுடன் காணப்பட்டாள் எனக் கூறப்படுகிறதை நாம் அறிவோம். தினமும் செபமாலை சொல்லுங்கள் என அவள் கூறியுள்ளதையும் நாம் அறிவோம். இவ்வாறு இறைவனின் தாய் மானிடருக்குத் தோன்றி திருச்செபமாலை ஓதுங்கள்...! என்று கூறுகின்றாள் என்றால் திருச்செபமாலையில் அவளுக்கு இருக்கும் பக்திக்கும், பிரியத்திற்கும் வேறு என்ன சான்று தேவை?

உலகில் நடைபெறும் போராட்டங்களுக்கும், இரத்த ஆறுகளுக்கும் திருச்செபமாலையை நாம் மறந்து வாழ்கின்ற நிலையே காரணம் என்று புலனாகின்றது. அதனை ஓதுவோருக்கு என்றுமே துன்பம் வராது. குடும்ப செபமாலை மூலம் யார் தம் குடும்பங்களை இறைவனிடம் நட்புறவாக்குகின்றாரோ அக் குடும்பத்தினர் நீர் நிலைக்கருகில் நாட்டப்பட்ட மரம்போல செழித்தோங்குவர். அக் குடும்பம் அமைதிப் பூங்காவாகவும், அன்புச் சமூகமாகவும் செழித்து வளரும் என்பது கண்கூடு.

செபமாலை "திருச்சபையின் பாதுகாப்பு கவசம்" என்றும், பலர் புனிதம் அடைய உதவியதால் "புனிதம் காக்கும் போர்க்கருவி" என்றும் அழைக்கப்பட்டது. நமது குடும்ப உறுப்பினர்களின் புனிதத்தைக் காக்க செபமாலை சிறந்த ஆயுதமாக விளங்கும் என்பது தெளிவு.

மனிதனை புனிதனாக மாற்றும் "செபமாலை" பற்றி திருத்தந்தையர்கள் கூறிய கருத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

♦ "செபமாலை செபிக்கும் ஒரு படையணியை என்னிடம் கொடுங்கள் நான் உலகை வென்று காட்டுகின்றேன்"
- 9ம் பத்திநாதர்

♦ "தீமைகளுக்கெல்லாம்மாற்றுமருந்தும் நமது ஆசீர்வாதங்களுக்கெல்லாம் ஆணிவேராக இருப்பதும் செபமாலைதான்"
- 13ம் சிங்கராயர்

♦ "மரியாவின் இதயத்தைத் தொடக்கூடிய செபங்களில் அதிக சிறப்பு வாய்ந்த செபம் செபமாலையே" - 10ம் பத்திநாதர்

♦ "பசாசுகளை விரட்டியடிக்கவும், பாவத்திலிருந்து பாதுகாக்கவும் வலிமையான ஆயுதமாயிருப்பது செபமாலையே"
- 11ம் பத்திநாதர்

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் 2002 ஒக்ரோபர் திங்கள் 15ம் நாளில் இருந்து 2003 ஒக்ரோபர் திங்கள் 15ம் நாள் வரை செபமாலை பக்தியை வளர்க்க 'தேவ இரகசியத்தின் ஒளி' என்ற திருமடலை எழுதியுள்ளார். இதனால் செப-மாலை இன்றும் நம்மிடம் ஆன்மீகத்தை ஊட்டி வளர்க்கும் சிறந்த ஆயுதமாகவும், எதிரியிடம் நம்மைக் காப்பாற்ற சிறந்த கவசமாயுள்ளது என்பது வெளிப்படை உண்மை.

எமது குடும்பங்கள் அன்னை மரியாளைப் போன்றும் இறைவனைப் போற்றும் குடும்பமாக மாற வேண்டும். நம் குடும்பங்கள் இறை புகழ் பாடும் சிற்றாலயங்களாக மாறவேண்டும். திருநூலை வாசித்து அதை தியானிக்க வேண்டும். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கடவுளைப் புகழ்ந்து, திருப்பாடல்களை வாசித்து, இறை வார்த்தையை தியானித்து இறையுறவில் மகிழ்ந்திருப்போம். இறையாசீர் நம் குடும்பத்தில் நிறைவாய் கிடைக்க இதைவிட சிறந்த வழி ஒன்றுமில்லை. மரியாளின் பரிந்துரைமூலம் நாம் எமக்குத் தேவையான வரங்களைப் பெற்றுக்கொள்கின்றோம். அவ்வளவு உயரிய பதவியை இறைவன் மரியாளுக்கு கொடுத்துள்ளார் என்றால் அவள் ஒரு மனிதப் பிறவிதானே. அவளுக்கு இவ்வளவு மாண்பும், மரியாதையும் ஏன் என்று சிந்தித்ததுண்டா? அவள் தன் வாழ்நாள் முழுதும் இறை விருப்பப்படி செயற்பட்டவள். அவள் பாவம் இன்றி உலகில் பிறந்தவள். அவள் தூய ஆவியால்தான் கருவுற்றாள்.

ஆகவே அன்னை மரியாவின் எளியவாழ்வும், 'செபமாலை மீது அவள் கொண்ட பிரியத்தையும், அவளின் வாழ்விற்கு இறைவன் அளித்த சிறப்பம்சங்களையும் நாம் கண்டு கொண்டோம். அவளின் வாழ்வு ஒரு 'அதிசய வாழ்வு' அவள்

அ.ஜஸ்ரின் ஷறோன்

ஒரு 'தெய்வீகப் பெண்மணி' வரையறையற்ற 'தேவலோகப் பெண்'. எமக்காக அவள் பரிந்து பேசினாலன்றி எமது தேவைகள் நிறைவேற்றப்படமாட்டாது. நாமும் மரியாளின் வாழ்வை எம்முன் கொண்டு வாழ்வோம். தினமும் திருச்செபமாலையை செபித்து அவளை மகிழ்விப்போம். பிறரையும் திருச்செபமாலை செபிக்க ஊக்குவிப்போம்.

"செபமாலை செபித்து சிறப்புடன் வாழ்வோம்"

---

# சந்தோஷத்தின் திறவுகோல் எங்கே?



குடும்பநலக் கருத்தரங்கு ஒரு மண்டபத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் நோக்கம் கணவன் மனைவியிடையே உள்ள உறவை மீளாய்வு செய்து அதை வலுப்படுத்துதலாகும். பேச்சாளர் தன் உரையிடையே பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தார். "உங்கள் கணவர் நீங்கள் சந்தோஷமாக வாழ எப்பொழுதும் துணையாயிருக்கிறாரா"? என்ன பதில் சொல்லலாம் என்று அவையிலுள்ள பெண்கள் சிந்தித்துக் கொண்டிருக்க தன் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள வருகை தந்த சாராவிடம் அதே வினாவை எழுப்பினார். அவளின் பதில் "இல்லவேயில்லை." எல்லோருக்கும் ஆச்சரியம் அதிர்ச்சியும் கூட. சாராவின் அனுபவப் பகிர்வு இதுவே: என் சந்தோஷத்திற்கு காரணம் என் கணவனல்ல. என் சந்தோஷத்திற்கு காரணம் நானே. அது என்னிலேயே தங்கியுள்ளது. ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் ஒவ்வொரு நிகழ்விலேயும் அமைதியாக சந்தோஷமாக வாழ தீர்மானிப்பது நான். இன்னுமொருவரிலோ அல்லது சாதகமான சூழலிலோ தங்கியிருந்தால் அது ஆபத்தில்தான் முடியும்.

இப்பொழுது நான் திருமணமா-கியவள். அதற்கு முன்னரும் வீட்டிலோ பாடசாலையிலோ நான் சந்தோஷமாக வாழக் கற்றுகொண்டேன். வாழ்வு என்னும் கொடையை நான் பெரிதாக மதித்து பேணிக்காத்து வருகிறேன். சந்தோஷமாக இருக்கும் பொறுப்பு என்னில் தங்கும் பொழுது கணவனின் சுமை எளிதாகிறது. உறவும் சீராகிறது. வாழ்க்கைப் பயணமும் குடும்பக் கடமைகளும் சுமுகமாகின்றன. பிறரோடு உள்ள உறவுகளும் இனிதாகின்றன. இதுவே இவ்வளவு கால இல்வாழ்வின் சந்தோஷத்திற்கான இரகசியம். எனது சந்தோஷத்திற்கான திறவுகோலை வேறு எவருக்கும் கையளித்தலாகாது என இரத்தினச் சுருக்கமாக கூறி முடித்தாள்.

சாராவின் அனுபவப் பகிர்வு எத்துணை ஆளுமைப் பண்புகளை வெளிக் கொணர்கின்றன!.

மனதை நிலை குலையாமல் தக்கவைப்பதும் எப்பொழுதும் அமைதி யாக சந்தோஷமாக வாழக்கற்றுக் கொள்வதும் எனது பொறுப்பாகும். வளமை நிறை நேரமோ, வறுமையோ, கூடிவாழும் நேரமோ, தனிமையில் துவளும் நேரமோ புரிந்துணர்வு உள்ள நேரமோ, வெறுத்து ஒதுக்கப்படும் சந்தர்ப்பமோ எல்லாச் சூழல்களிலும் யதார்த்த நிலையைப் புரிந்துகொள்ளல் அவசியமே. நம்மை ஆட்டிப்படைக்கும் வெவ்வேறு உணர்வலைகள் எங்கிருந்து வருகின்றன? முதலில் மனம் எனும் கருவூலத்தில் இருந்து சிந்தனைகளும், சிந்தனைகள் எனும் ஊற்றிலிருந்து பல தரப்பட்ட உணர்வுகளும் செயற்பாடுகளும் உதயமாகின்றன. ஆகவே சிந்தனைகள புடமிடும்பொழுது நம் எதிர்மறையான உணர்வுளும் சீராகின்றன. மனமும் அமைதியடைகிறது.

பழைய ஏற்பாட்டில் இணைச்சட்ட நூலில் ஆண்டவன் கூறியது இன்றும் நம்மை அறிவுறுத்துகின்றது. "உன்மேல் இன்று நான் விண்ணையும் மண்ணையும் சான்றாக அழைத்து வாழ்வையும் சாவையும் ஆசியையும் சாபத்தையும் உமக்கு முன் வைக்கிறேன். நீயும் உன் வழித்தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வைத் தேர்ந்துகொள்". (இணைச் சட்டம் 19:30)

இன்றைய நாளில் நான் எதைத் தேர்ந்தெடுக்கப் போகிறேன்? கவலையா? மன அமைதியா? பகைமையா நட்புறவா? பழிக்குப்பழி வாங்குவாதா? மன்னிப்பு அளிப்பதா? போதை வஸ்துக்கு அடிமையாவதா? மட்டுமிதத்தோடு வாழ்வதா? பணத்தையும் பொருளை யும் பதுக்கி வைப்பதா? இல்லாதவர்களுடன் பகிர்ந்து வாழ்வதா? இறைவனின் அருளைத்தேடுவதா? தீயவழிகளில் மூழ்குவதா? ஆகவே வாழ்வை வளமாக்கி நானும் பிறரும் சந்தோஷமாய் இருக்கும் வழிகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு என் கையிலேயே உள்ளது என்பதை உணர்கிறேனா? ஆகவே வாழ்வின் வழி மகிழ்ச்சியின் திறவுகோல் எனக்கு புறத்தேயல்ல எனக்குள்ளேயே இருக்கிறது.

புனித பிரான்சீஸ்கு அசிசியாரின் அமைதிக்கான செபத்தின் இறுதிப்பகுதி இன்னுமொரு படிப்பினையை முன் வைக்கிறது. ஆறுதலை, சந்தோஷத்தை நமக்காகத் தேடுவதில் அல்ல அதைப் பிறருடன் பகிர்வதின் வழியாகவே நம் வாழ்வு அர்த்தம் பெறுகிறது என்ற யதார்த்தத்தை அது நமக்கு உணர்த்துகின்றது. "ஆறுதலை தேடுவதை விட அதை பிறருக்கு கொடுப்பதையும் பிறர் என்னைப் புரிந்து கொள் வதைவிட நான் அவர்களை புரிந்து கொள்ளவும் அன்பு செய்யப்படுவதைவிட அன்பு செய்யவும் நான் நாடும்படி எனக்கு அருள்புரியும். ஏனெனில் கொடுப்பதன் மூலம்தான் நாம் பெற்றுக்கொள்கிறோம்." ஆகவே நமக்குள்ளதைப் பகிர்ந்து வாழ்வதே சந்தோஷத்திற்கு வழியாகும்.

அருட்பணி ஜே.திருச்செல்வம் (அமதி )

கிறிஸ்தவர்களாகிய நமக்கு கிறிஸ்துவே அமைதியின் ஊற்று. மகிழ்ச்சியின் இருப்பிடம்." என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன்" (யோவான் 15:11) செபத்தின் வழியாக கிறிஸ்துவோடு இணைகின்ற பொழுது நமக்கு கிடைப்பது இறையருள், அமைதி, சந்தோஷம். மேலும் சந்தோஷமாக வாழ்வது எனது பொறுப்பு என்றால் என்னிடமிருக்கும் சந்தோஷத்தை மட்டுமல்ல பகிர்ந்தளிக்கக்கூடிய எல்லாக் கொடை-களையும் பிறருடன் பகிர்ந்து வாழ்வது இறைவன் எனக்குக் கொடுத்த உன்னத அழைப்புமாகும்.

# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

## பின்னணி, தோற்றம், வளர்ச்சி



**ஊர்காவற்துறையில் முதல் மகா ஞானொடுக்கம்....**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இவ்வாறாக அன்னை மரியாள் இவர்களது உள்ளங்களை யேசுவின் பக்கம் திருப்பிக்கொண்டிருந்தபோது பசாசு சோம்பியிருக்கவில்லை. இவர்களை எவ் வாறாயினும் திசை திருப்பமுயன்று கொண்டேயிருந்தது. மகா ஞானொடுக்கத் தில் ஆண்களின் பங்களிப்பு சாதகமாக வந்துகொண்டிருந்தபோது ஒரு திடீர் திருப் பம். ஆயர். குருக்களின் செயற்பாடுகளைக் கேள்விக்குறியாக்குமளவுக்கு ஏற்பட்டது. நீண்ட காலமாக ஏதோ காரணத்திற்காக வெளியூர் சென்ற அவ்வூரவர் ஒருவர் திடீரென ஊர் திரும்பியபோது ஆயர் மற்றும் குருக்களின் மகாஞானொடுக்கப் பணிகளால் ஏற்பட்டுக்கொண்டிருந்த மாற் றங்களைக் கண்டு பொறுக்கமுடியாதவ னாக வெகுண்டெழுந்து மிகவும் மோச மான. வன்கொடுமையைத்தூண்டும் வார்த்தைகளை பிரயோகித்தவண்ணம் ஒரு பெரிய குழப்பநிலையையே ஏற்படுத்தி னான். எல்லா மக்களுமே குழம்பிப்போன துடன் இதுவரை இடம்பெற்ற மாற்றங் கள் எல்லாம் கானல் நீராகி விடுமோ என்ற நிலையேற்பட்டது.

அத்துடன் பணிக்களைப்பினாலும், அவ்வசாதாரணநிகழ்வினால் ஏற்பட்ட மன அழுத்தினாலும், துயரத்தாலும் ஆயர் செமேரியா சுகவீனமற்று உடல் நிலை மிகவும் மோசமடைந்தமை ஆயன் தனது மந்தையின் பிடிவாதப்போக்கிற்காகவும், பாவங்களுக்காகவும் அடிக்கப்பட்டார் போன்றிருந்தது. மறுபுறத்தில் செபமாலை அன்னையின் திருநாள் (ஒக்டோபர் 7) நெருங்கிக்கொண்டிருந்தது. இந்த வரலாற் றுச் சிறப்புமிக்க நாள் எப்போதும் கன்னி மரியாள் அவளுடைய திருமகனின் எதிரி கள் மீது கொண்ட வெற்றியின் நினை வாக இருந்தமை இங்கும் இந்த எதிர் நோக்கு ஒரு விடியலைக்கொண்டு வருமா ஒரு கேள்வி எழுந்தது. (பாப்பரசர் புனித 5ம் பத்திநாதர் (1566-1572) காலத்தில் ரோமாபுரிக்கும் இத்தாலிக்கும் பெரும் (அச்சுறுத்தலாக விளங்கிய பாரிய துருக் கிய படைகளுக்கெதிராக இடம்பெற்ற கடற்சமரில் கிறிஸ்தவ படைகள் துருக்கிய படைகளை 1570ம் ஆண்டு ஒக்ரோபர் 7ம் திகதி முழுமையாக முறியடித்தன. இவ்வெற்றி கிறிஸ்தவர்கள் செபமாலை- யை பக்தியுடன் செபித்ததால் கிடைத்த வெற்றியென்று ஒக்ரோபர் 7ம் திகதி செபமாலை அன்னையின் திருநாள் கொண்டாடப்படத்தொடங்கியது.) அதே நாள், ஒக்ரோபர் 7ம் நாள்தான் ஊர்காவற் துறையிலும் காத்திரமான, அதிர்ச்சிகர மான. புதுமையான நிகழ்வுகள் அரங் கேறின. மறையுரைஞர் இறுதிவரை பிடிவாதமாக, மனம்திருந்தாத பாவிபற்றி மறையுரையாற்றிக்கொண்டிருந்த போது பசாசு தனது இறுதித்தாக்குதலைத் தொடுத் தது எனலாம். திடீரென தமது கெடுமதி யில் இன்னும் பிடிவாதமாக இருந்த சிலர் மிகவும் மோசமான தேவதூஷணவார்த் தைகளை உரக்கப்பிரயோகித்தனர். ஏற் கனவே ஆயரின் கடும் சுகவீனம் கார ணமாக கடும் கவலைக்கும் அழுத்திற் கும் உள்ளாகியிருந்த மறையுரைஞர் மிகவும் உரத்த குரலில் தமது அதி ருப்தியை வெளிப்படுத்தினார். இந்த மிக வும் மோசமான நிகழ்வினால் அத்திருப் பணியாளர் அழுத்தத்திற்குள்ளாகி மூர்ச்சை யடையும் நிலைமையேற்பட்டது.

அங்கு ஆலயத்தில் கூடியிருந்தோருக்கு இந்நிகழ்வு அவர்தளுடைய குருக்கள தும், ஆயரதும் மரணத்தை மட்டுமல்ல மீண்டும் கிறிஸ்து யேசுவின் மரணத்தை கொண்டுவருவதற்கீடாகும் என்று உணர்த் தப்பட்டது. அப்போதுதான் அங்கே உண் மையான மனமாற்றம் ஆரம்பமானது. குழுமியிருந்த எல்லோருமே கண்ணீர் சிந்தித் தேம்பியழுதவர்களாக பீடத்தின் முன் குப்புற விழுந்து கல்நெஞ்சம் கொண்ட தமது பிடிவாதங்களுக்காக மன்னிப்புக்கேட்டனர். அன்று பொழுது சாயும் நேரம் ஆயர் செமேரியா கடும் சுகவீனமுற்று படுக்கையிலிருந்த நிலையி லிருந்து திடீரென எழுந்து கூடியிருந்த குருக்களிடம், "வாருங்கள் திவ்விய நற் கருணைநாதர் முன் ஒன்றாகச்செல் வோம், அங்கு அமல அன்னையின் திருப்புகழ்மாலை வேண்டுதலைச் சொல்லி இந்த நாதியற்ற பாவிகளுடைய மனமாற் றத்திற்காக அவருடைய பரிந்துரையை இரந்து வேண்டுவோம்" என்று கூறினார். இது உண்மையில் ஒரு இறை தூண்டு தலாகவேயிருந்தது.

இந்த வேண்டுதல் நிறைவுக்கு வந்த கையோடு இம்மக்களுள் மிக வும் பிடிவாதமாக மகாஞானொடுக்கத்திற் கெதிரான நிலைப்பாட்டில் இருந்த தலை வர்கள் இரகசியமாக ஒருவர் பின் ஒருவராக மறையுரைஞர் குழுவினரை அணுகி வந்தனர். ஆயரும் அவரது குழுவினரும் கன்னி மரியாளைப் புகழ்ந்தனர். அன்றே ஒப்புரவுப்பணியில் இதுவரையில்லாத

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

பாரிய முயற்சியின் முதற்படி எட்டப்பட்டது. இதுவரையில் மறையுரைஞர்கள் பல கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்திருந் தாலும் பல ஏமாற்றங்களை எதிர் கொண்ட னர். பல வஞ்சகமான ஏமாற்றுவேலை களும் அரங்கேறியிருந்தன. ஆனால் இப் போது ஒரு முன்னேற்றகரமான மாற்றம் தெளிவாக உணரப்பட்டது.

எதிரெதிரே அணிவகுத்து ஒன்றை யொன்று தாக்கி நீர்மூலமாக்கத்துடித்துக் கொண்டிருக்கும் இரு இராணுவ அணிக ளைப்போல் நிலை கொண்டிருந்த இவர் கள் எப்படி மாறினார்கள்? ஆண்களில் ஏற்பட்ட இந்தப்பாரிய மாற்றத்திற்குப் பெண் களுடைய இடைவிடாத வேண்டுதலும், அர்ப்பணிப்புள்ள செயற்பாடுகளுமே இவர் களுடைய கணவர்களில் ஏற்பட்ட மாற்றத் திற்கு முக்கிய காரணம். மகாஞானொடுக்க நாட்களில் இரவுவேளைகளில் ஒரு குறிப் பிட்ட நேரத்தில் ஆலய மணிகள் ஒலி யெழுப்ப தத்தம் இல்லங்களில் பெண்கள் செபத்தில் ஈடுபடுவார்கள். அத்துடன் நிலை யான அமைதியைப் பங்குச் சமூகத்தில் ஏற்படுத்தப் பல துணிச்சல் மிக்க பெண்கள் ஒன்றித்து செபத்தில் தங்களை அர்ப்பணித் தார்கள். மேலும் தாம் எதிர்பார்த்த உண் மையான அமைதி ஏற்படும் போது புனித அந்தோனியார் பெயரில் ஒரு திருப்பலி ஒப்புக்கொடுக்க ஒரு நேர்ச்சையும் செய்தனர். (புனித அந்தோனியார் இங் குள்ள ஆலயங்கள் ஒன்றின் பாதுகாவல ராவார்)

இறுதியில் எதிர்பார்த்த வெற்றி கிடைத்தது. ஆண்கள் பெரும் எண்ணிக் கையில் முதலில் வரத்துதொடங்கினர். தொடர்ந்து அவர்கள் ஒப்புரவு அருளடை யாளத்தையும் அணுகினர். இதுவரையில் இவர்களுள் பலர் 10, 20, 30 வருடங்க ளாக அல்லது சிலவேளைகளில் இதை விடக் கூடுதலான காலம் சமயமே இல்லை யென்றபோக்கில் வாழ்ந்து கொண்டிருந் தனர். இப்போது எல்லாருமே ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பித்தனர். மக்களுள் இதுவரை இருந்து வந்த இரு பிரிவுகளி லிருந்தும் பாரிய மனமாற்றங்கள் நிகழ்ந்தன.

மனமாற்றத்திற்கு அடையாளமாக ஒரு மேசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திருச்சிலுவையின் மீதும், திருவிவி லியத்தின் மீதும் ஆணையிட்டுத் தமது ஆயர் முன்வைத்த ஒழுங்கு விதிகளுக்குப் பணிந்து நடப்பதாகவும் அத்துடன் தமது இறுதி நாள் வரை ஆயருக்கும் அவருடன் பணியாற்றும் திருப்பணியாளருக்கும் பணிந் திருப்பதாகவும் உறுதிவழங்கினர். அத்து டன் பிரிவினை, கிளர்ச்சி போன்ற எண்ணங்களைக் கைவிடுவதாகவும் தமது சகோதரர்களுடன் கொண்டிருந்த வெறுப்புணர்வுகள் எல்லாவற்றையும் முற்றாக கைவிடுவதாகவும் வாக்களித்த னர். அங்குள்ள தலத்திருஅவைக்குப் பொறுப்பாக இருப்பதற்கென ஆயர் மிக வும் கவனமாகத் தேர்ந்தெடுத்து நியமித்த பொதுநிலையினர் மக்களிடையே மீளவும் நல்லுறவைக் கட்டியெழுப்ப ஏதுவாக விருந்தது. (தொடரும்....)




தளபதி ஒருவன் ஊரில் வெற்றி பெற்று மாபெரும் களிப்புடன் ஊர் திரும்பிக்கொண்டி ருந்தான். காட்டின் வழியே பயணம். காட்டில் ஒரு துறவி தவம் செய்துகொண்டி ருப்பதை பார்த்த தளபதி தன் படைகளு டன் சென்று துறவியை வணங்கினான். துறவியிடம் "சொர்க்கம் எது? நரகம் எது? என்று தாங்கள் உர்த்தவேண்டும்" என் றான். தியானத்தில் மூழ்கியிருந்த துறவி தளபதியின் கேள்விக்குப் பதில் சொல்ல வில்லை. தளபதி உரக்கக் கேட்டான். உலுக்கிக் கேட்டான். பதில் சொல்லாத துறவி: சிறிது நேரத்தின் பின் கண்விழித்து "என் தவத்தை ஏன் கலைத்தாய்? "என்றார். "ஞானி என்பதால் உம்மிடம் மதிப்பு வைத் தேன். நீயோ என்னை படைகள் முன் அவ மானப்படுத்தி விட்டாய்" எனக் கூறி தள- பதி உடைவாளை உருவி ஓங்கினான். உடனே துறவி " நீ கேட்ட நரகம் இது தான்" என்றார்." ஆத்திரத்தில் அறிவிழந்து தவறு செய்தேன் குருவே என்னை மன்னியுங் கள்" எனத் தளபதி மண்டியிட்டான். துறவி சொன்னால் "இது தான் சொர்க்கம்" என்றார். சொர்க்கத்தைச் சொந்தமாக்குவதும் நர கத்தை சொந்தமாக்குவதும் நமது கையில் தான் உள்ளது. மோட்சம் போக வேண்டு மானால் இந்த உலகில் மோசம் போய் விடாதே.

## இறந்தோரின் கல்லறைகள்....

(4ம் பக்கத் தொடர்ச்சி...)

"ஏனைய மனிதர்களை உண்மையாக அன்பு செய்து வாழும் யாரும் முழுமையாக இறந்துவிட முடியாது" என்கிறார் சொப்பறினோ அறிஞர். இன்று ஒவ்வொரு மனித னும் அன்பிற்காக ஏங்குகிறான். மனி தன் மனிதனை மதிப்பதில்லை. அதிகாரம், பதவி அந்தஸ்து, படித்தவன் இதே நிலைகளில் தகுதி உடையோர் ஏனைய மனிதங் களை மிதித்துக்கொண்டே வாழ முற்படுகிறார்கள். இறப்பு என்பது உயிர் உடலை விட்டுப் பிரியும் போது மட்டும் நடப்பதல்ல. உடலில் உயிர் இருக்கும்போதே செத்த பிணமாக ஒரு மனிதன் வாழும்போதே அவன் இறந்தவனாகவே கணிக்கப்படுகிறான். அன்பு செய்யாதபோதும், அடிமைப்பட்டு அசட்டுத்தனமாக வாழும் போதும்,அர்த்தம் இல்லாமல் வாழும் போதும், நம்மைத் தழுவிக் கொள்வது சாவே அல்லாமல் வாழ்வல்ல என்பதை நாம் உய்த்துணர்ந்து கொள்ளவேண்டும்.

"இறந்தோரின் கல்லறைகள் வாழ்வோரின் கருவறைகள்...
உடல்கள் தான் சாகின்றன நினைவுகள் சாவதில்லை...
ஊருக்கென்று வாழ்ந்த உள்ளம் சிலைகள் ஆகலாம் ...
உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்கள் ஆகலாம்..."

இயேசுவின் இறப்பு வரை சிலுவை என்பது துன்புறுத்தல், அவமானம் மற்றும் மரணத் தின் சின்னமாக விளங்கியது. இயேசுவின் இறப்பின் பின் சிலுவை நிலைவாழ்வின் சின்ன மாகியது. அருள்தரும் பேரின்பத்தின் சின்னமாகியது. ஒளியின் சின்னமாகியது. நல்லிணக்கத் தின் சின்னமாகியது. இவ்வுலகில் காணப்படும் பலவிதமான பல் கலாசாரங்களுக்கு உட்பட்ட சிலுவைகளைப் பற்றிய மறை அறிவையும், ஆன்மீக அறிவையும், அனுபவத்தையும் மையமாகக் கொண்டு பல்வேறு வகையான சிலுவைகளின் வடிங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் காட்சிப்படுத்தியது மட்டுமன்றி, சிலுவைளின் சரித்திரம் என்னும் நூலிலும் பதிவு செய்துள்ளேன்.

**அருட்பணி சிசில் ஜோய் பெரேரா, அதிபர், "தஹம் செவன" இடைநிலைக் குருமடம், களுத்துறை.**

"எனது சீடராக வரவிரும்பும் எவரும் தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" - இயேசுக்கிறிஸ்து



### 14 எருசலேம் சிலுவை

இந்தச் சிலுவையானது அமெரிக்க அகழ்வாராய்ச்சியாளர்களால் மறைந்த முதலாவது கிறிஸ்தவ எருசலேம் நகர் அரசனின் கல்லறையிலிருந்து எடுக்கப்பட்டது. இச்சிலுவை யுத்தகாரரின் சிலுவை எனவும் அழைக்கப்பட்டது. ஏனெனில் இச்சிலுவைச்சின்னமானது மத்தியகாலத்தில் திருத்தந்தை 2ம் உர்பன் அவர்களால் சிலுவை யுத்தத்திற்கு சென்ற வீரர்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பு துகில் கொடியில் (banner) இச்சிலுவை காணப்பட்டது. இச்சிலுவை பல அர்த்தங்களைக் கொண்டது. இது இயேசு சிலுவையில் தொங்கிய போது காணப்பட்ட ஐந்து காயங்களையும் குறிக்கிறது. (நடுவிலுள்ள பெரிய சிலுவை இயேசுவின் விலாவில் ஈட்டியால் ஏற்பட்ட காயம், சிறிய சிலுவைகள் இயேசுவின் கை, கால்களில் ஏற்பட்ட காயங்கள்) உலகெங்கும் சென்று நற்செய்தியை பறைசாற்றுங்கள் என்ற இயேசுவின் கட்டளையையும், எருசலேமிலிருந்து தொடங்கிய இயேசுவின் பணியையும் குறிக்கின்றது. பின்வரும் குறியீட்டு அளவிலான விபரணங்களும் இச்சிலுவையில் உள்ளன.

- ✔ பழைய ஏற்பாட்டுச் சிலவையுட னான தொடர்பு (நான்கு Tau சிலுவை கள்) மற்றும் பதிய ஏற்பாட்டு படிப்பினை கள் (நான்கு கிரேக்க சிலுவைகள்)
- ✔ மறைபரப்பாளர்களால் உலகின் நான்கு மூலைகளிலும் பரப்பப்பட்ட கிறிஸ்துவை மையமாகக்கொண்ட நான்கு நற்செய்தியாளர்களின் பணிகள்.

எருசலேமிலுள்ள கிறிஸ்தவர்களின் கண்களுக்கு இது ஒரு யாத்திரிகரின் சிலுவை. நடுவிலுள்ள பெரிய சிலுவை யாத்திரிகரையும், சிறிய சிலுவைகள் யாத்திரிகர்களின் யாத்திரைகளின் போது அவர்களுக்கு ஆதரவாக இருப்பவர்க ளையும், அவர்களுக்கு செப உதவி செய்பவர்களையும் குறிக்கிறது.

# பொதுநிலையினரின் திருத்தூதுப் பணி

புகுமுக அருளடையாளங்கள் வழியாக இயேசுவின் மறையுடலில் அங்கத்தவர்களாகி, அவரது அரச குருத்துவ, ஆயர்த்துவப் பணிகளில் பங்கெடுத்து தலையாகிய அவருக்குக் கீழ்ப்படிந்து பங்குத் தந்தையுடனும் ஏனைய அங்கத்தவர்களுடனும் ஒன்றிணைந்து இறைவன் படைத்த இந்த அழகிய உலகையும் மனிதர்களையும் பாவமாசணுகா வண்ணம் சாத்தானுடன் போராடி மேன்மேலும் அழகுபடுத்தும் பணியே பொதுநிலையினரின் திருத்தூதுப் பணியாகும். இக்கட்டுரையில் 5 தலைப்புக்களூடாக இன்றைய பொதுநிலையினரின் திருத்தூதுப் பணியின் அவசியம் பற்றி எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

**1. கத்தோலிக்க நறுமணம் கமழும் இல்லங்கள், குடும்பங்கள்.**
**2. கத்தோலிக்க அன்புறவில் திகழும் சமூகம்.**
**3. கத்தோலிக்க நம்பிக்கையில் மிளிரும் ஆலயங்கள், பங்குகள்.**
**4. கத்தோலிக்க ஒன்றிப்பில் இணையும் யாரும் நினையாத ஆன்மாக்கள்.**
**5. கத்தோலிக்க இறையுறவில் அவ நம்பிக்கையுடனும் மனக் கடினத்துடனும் பயணம் செய்வோர்.**

**மேலே கூறப்பட்டவை தொடர்பாகச் சற்று விரிவாகப் பார்ப்போம்.**

1. எமது இல்லங்கள், குடும்பங்கள், கத்தோலிக்க நறுமணம் கமழும் குடும்பங்களாக நாம் திகழ, இறையுறவும் அன்புறவும் கட்டியெழுப்பப்படும் இல்லங்களாக எமது வீடுகள் மாறவேண்டும். இதற்கு அவசியம் திருவருட்கருவிகளின் பாவனை. திருவிவிலியம், திருச்சிலுவை, திருப்படங்கள் திருச்சொரூபங்கள், ஆசீர்நீர், வெரோணிக்கங்கள், போன்ற கத்தோலிக்கதிருப்பொருட்களைப் பயன்படுத்துவது, எம் தூய்மையைக் குழப்ப வரும் சாத்தானின் சோதனைகளை முறியடிக்கத் தேவை. கருக்கொலை குடும்பக் கட்டுப்பாடு விவாகரத்து போன்ற மனச்சாட்சியைக் கொல்லும் பாவங்களை எதிர் கொள்ள நாளாந்த குடும்ப செபம், செபமாலை அவசியமாகின்றது.

மேலும் தொடர் நாடகங்களை, சினிமாப் படங்களைத் தவிர்த்து மாதா தொலைக் காட்சி போன்றவற்றைப் பார்ப்பதும், சினிமாப் பாடல்களைத் தவிர்த்து கத்தோலிக்க பாடல்களை இல்லங்களில் செவிமடுப்பது தேவையானதாகும். சிறிய வயதில் தாய் தந்தை சொல்லிக் கொடுத்த செப, தவ, பாவப் பரிகார முயற்சிகளே பலரைக் குருக்கள், துறவிகளாக நல்ல பொது நிலையினராக ஆக்கியிருக்கின்றன. திரு இருதய அரசாட்சியை பங்குத் தந்தையின் தலைமையில் எம் இல்லங்களில் நிறுவுதலும் வருடந்தோறும் வசதியான நாளில் புதுப்பித்தலும், திருவிவிலிய அரங்கேற்றமும் கத்தோலிக்க சாட்சியவாழ்விற்கு உதவியாகும்.

2. நாம் வாழும் சமுகத்தில் கத்தோலிக்க அன்புறவில் திகழும் குடும்பங்களாகத் திகழ, பின்வரும் நான்கு விடயங்களை இனங்கண்டொதுக்குவோம்.

அ. பச்சைக் கதைகள்: தூசண வார்த்தைகள், பாலியல் கதைகள், பகடி, நையாண்டி, நெளிப்பு, ஏளனம், விளையாட்டாகத் தன்னும் பொய் பேசுதல், கெட்ட வார்த்தைகள் பேசுதல்.(எபே 5:4)

ஆ. சிவப்பு விளக்குப் பகுதிகள்: தனது துணையின் இல்லாமை அல்லது இயலாமையை சாட்டாக வைத்துப் "பிறர் மனை நயத்தல்". இந்த நிறுவனமயப்படாத விபசாரத்திற்கப்பால் பெரிய முதலீடுகளைச் செய்வதற்கும், பணம் பெருக்குவதற்கும், கையொப்பம் பெறுவதற்காக வளங்கப்படும் நிறுவனமயப்படுத்தப்பட்ட விபசாரம். படுக்கையறை மஞ்சம் தசை வியாபாரத்தால் மாசுபடுத்தப்படுகின்றது.

இ. நீலப்படங்கள்: முன்னைய காலங்களில் அறிவு சார்ந்த இரசிகர்களுக்காக குடும்ப, சகோதர பாசம் நிறைந்த சினிமாக்கள் பலவீனப்பட்ட பாலியல் சார்ந்த உணர்ச்சிகளுக்கு மட்டும் இடம் கொடுக்கும் இரசிகர்களுக்காக பாலியல் சார்ந்த சினிமாக்கள் வெளிவருகின்றன. தூய கலையுணர்வுகள் காமுறுகின்றன.

ஈ. மஞ்சள் பத்திரிகைகள்: காம உணர்ச்சிகளைத் தூண்டுகின்ற பாலியல் விடயங்களைச் சுமந்துவரும் பத்திரிகைகளை விட்டொதுக்கி எமது **மறைமாவட்டப் பத்திரிகையான பாதுகாவலன்** மற்றும் ஏனைய மறைமாவட்டப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இந்தியக் கத்தோலிக்க சஞ்சிகைகளை ஊக்குவித்தல் அவசியம். மேலும் நல்ல நூல்களை வாசித்துப் பல கத்தோலிக்க அறிஞர்கள், புனிதர்களின் வாழ்வை அறிந்து, நாமும் ஏன் தீமைகளை எதிர்த்துப் போராடி அருள் நிறைந்த வாழ்வில் நிலை நின்று புனிதர்களாக மாற முடியாது என்ற எண்ணப் பதிவை நாமும் எம் பிள்ளைகளும் பெறுவோம்.

3. நம்பிக்கை மிளிரும் பங்குகள், ஆலயங்கள். ஆலயத் திருமண அருட்சாதனம் நிறைவேறியபின்புஏதாவதொருஅண்மையில் உள்ள ஆலயத்தைக் கணவனும் மனைவியும் சுயவிருப்புடன் தேர்ந்து கொண்டு அவ்வாலயப் பங்குத் தந்தையிடமிருந்து குடும்பப் பதிவுப் புத்தகம் பெற்றுக் கொள்வது அவசியம். தாய் தந்தையின்


## அருட்பணி. அன்ரனி பாலா

பரம்பரைக் கோவிலில்தான் கட்டாயமாக புதிய தம்பதியினர் சேரவேண்டியது அவசியமல்ல. எத்தனை ஆலயங்களில் தாபரிப்பு நிதி (பங்குத் தந்தைக்கு), ஆலய பராமரிப்பு நிதி (ஆலய பக்திச் சபைச் செயற்பாடுகளுக்கு), கொடுத்தாலும் ஒரு ஆலய குடும்பப் புத்தகமே போதும். ஏனெனில் இறப்பின்போது புத்தகமுள்ள சேமக்காலையிலேயே அடக்கப்படுவது வழமை. பிள்ளைகளுடன் குடும்பமாக முழுத் திருப்பலியில் பங்கு பற்றுவதும் பக்திச் சபைகளில் இணைந்து பணியாற்றுவதும் முக்கியமானதாகும். பிள்ளைகளை மறைக்கல்வி, திருப்பாலர்சபை போன்றவற்றிற்கு ஒழுங்காக அனுப்புவதும் அருட்சாதனக் கொண்டாட்டங்களை ஆயத்தம் செய்து பங்கெடுப்பதும் விசேடமாக மாதாந்த ஒப்புரவுஅருளடையாளத்தைக்குடும்பமாக வந்து குருவிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வதும் இன்றியமையாததாகும். பிள்ளைகளின் கல்வியில் மட்டுமல்ல கத்தோலிக்க திருஅவைக்குக் கீழ்ப்படிவுள்ள நல்லொழுக்கத்திலும் அக்கறை கொண்ட பெற்றோர்களாகக் கத்தோலிக்க பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்க முன்வர வேண்டும்.

அத்தோடு வசதி வாய்ப்புகள் நிறைந்த இக்காலத்தில் ஓரிரு பிள்ளைகளையே வளர்க்கத் திண்டாடும் பெற்றோர், வசதி வாய்ப்புகள் அற்ற அன்றைய சூழலில் பத்துப் பன்னிரண்டு பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கி விட்டதோடு ஆலய, பங்குச் சூழலில் தமது பங்களிப்பை வழங்கிய எம் முன்னோரின் நம்பிக்கை வாழ்வின் ஆழத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நம்பிக்கை செத்துவிட்டதா என்று எண்ணத் தோன்றுகின்றது.

4. துன்புறும் நிலையில் உள்ள யாரும் நினையாத ஆன்மாக்கள். நம்பிக்கையாளர்களாகிய எமது செப, தப, பாவப் பரிகார செயற்பாடுகளால் மட்டுமே இறையிரக்கத்தின் வழியாக மீட்கப்பட வேண்டிய இவர்களைப் பற்றி நாம் நாளாந்தம் அக்கறை கொள்ள வேண்டும். இறையிரக்கத்தின் தூதுவர் புனித பௌஸ்தீனாவும் பற்றிமா காட்சிப் பிள்ளைகளும் உத்தரிப்பு நிலையைக் கண்டு அஞ்சி நடுங்கினர். நரகத்தைக் கண்டு மயங்கி விழுந்தனர். நரகத்தில் உள்ளவர்களை மீட்க முடியாவிட்டாலும், உத்தரிப்பில் உள்ளவர்களின் மீட்பை நாம் விரைவு படுத்தலாம் இல்லையா?

யார் இந்த யாரும் நினையாத



ஆன்மாக்கள்? மனிதன் வில்லும் அம்பும் கொண்டு திரிந்த காலத்திலிருந்து இன்றுவரை, எத்தனையோ அரசர்கள், அரசிகளின் சுயநலன்களிற்காக, மண், பெண், பொன், ஆசைகளுக்காக எத்தனையோ கோடிக்கணக்கான போர்களில், நிலம், காடு, கடல், விண்வெளியில் கோடிக்கணக்கான அடிமைகள் போராடி பெயர், முகம், முகவரி தெரியாமல் தாங்களே கட்டிய கட்டடங்களுக்குள் புதைக்கப்பட்டும் சிக்கிச் சிதறிச் சின்னாபின்னமாகி விலங்குகள், பறவைகள் கடலுயிரினங்களுக்கிரையாகியும் போனார்கள். இவர்களும் இவர்களைப் பயன்படுத்திய எம் முன்னோரும் செய்த எண்ணிறந்த பாவங்களுக்கு யார் பரிகாரம்செய்துதீர்த்திருப்பார்கள்? எனவே இவ்வாறு பரிகரிக்கப்படாத அனைத்துப் பாவங்களையும் சுமந்து கொண்டே நாமெல்லோரும் நாளாந்தம் திருப்பலிக்குச் செல்கின்றோம். யானைப் பசிக்குச் சோளம்பொரி போல நாம் செய்து கொண்டிருக்கும் பரிகாரங்களைப் பன்மடங்காக்குவோம். ஆடம்பரங்களையும் நவீனயுக அலங்காரங்களையும் விட்டொழித்து எளிமை, பொறுமை தாழ்ச்சியுடன் எம் வாழ்வின் காயங்களை திருப்பலியில் யேசுவின் பாடுகளுடன் தந்தைக்கு ஒப்புக் கொடுப்போம். ஏனெனில் பாவியும் நீதிமானும் ஒன்றாக விண்ணகம் செல்வது தேவநீதிக்கு முரணானதாகும்.

5. மனக்கடினத்தோடும் அவநம்பிம்கையோடும் வாழ்வோர் நாள்தோறும் நிமிடந்தோறும் உலகத்தில் இடம்பெறும் ஏராளமான திருப்பலிகளுக்குச் சவாலாகப் பாவக் கடலும் பெருகிக் கொண்டே செல்கின்றது. அன்றாடம் பனித் துகள்கள் போலப் பாவிகள் நரகத்தில் விழுகிறார்களென்றும், மேலும் எண்ணிக்கையற்றோர் நரகத்திற்கான நுழைவுச் சீட்டுடன் காத்திருக்கின்றனரென்றும், உலகோர் அனைவரும் ஒரே குரலாக இறையிரக்கத்திற்காக அழுது மன்றாட வேண்டும் என்றும் புனித பௌஸ்தீனா கூறுகின்றார். இங்கு நாம் வாழும் காலமெல்லாம் மனமாற்றத்திற்காகப் பல்வேறுசந்தர்ப்பங்களைத்தந்து இரக்கத்தின் அரசராக இருக்கும் யேசு நாம் இறந்த பின்பு நீதியின் அரசராகவேயிருப்பார். "என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள்: உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள்" (மத் 25:34). "சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள்" (மத் 25:41). இயேசுவே விண்ணகத்தையும் நரகத்தையும் பற்றிச் சொல்லியிருக்க வேறு ஆதாரங்கள் தேவையில்லை. தலையாகிய இயேசுவின் மறையுடலாகிய திருஅவையின் அங்கத்தவர்களாகிய நாம் ஒருவர் மற்றவரின் மனமாற்றத்தில் அக்கறை கொண்டு செப, தவ, ஒறுத்தல் செய்து இயலுமானால் புத்தி சொல்லிக் காப்பாற்ற வேண்டும். முதல் வியாழன் நற்கருணை ஆராதனையில் பங்கு பற்றி, அன்றே மாதமொரு பாவறிக்கை செய்து மறுநாள் முதல் வெள்ளி முழுத் திருப்பலியில் பங்கு பற்றித் தகுதியோடு நற்கருணை உட்கொள்வதே சிறந்த பாவப் பரிகாரமென்று மார்க்கரீத் மரியம்மாளுக்கு இயேசு கூறினார்.

எனவே பொதுநிலைத் திருத்தூதுப் பணியினரின் கடமை, இறைவனின் அழகிய படைப்பை பாவமாசின்றிக் காத்து மேன் மேலும் அழகுபடுத்துவதாகும்.

## தீவக மறைக்கோட்ட இளையோருக்கான தலைமைத்துவ பயிற்சி முகாம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் வேலணை பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும், தீவக மறைக்கோட்ட இளையோர் ஒன்றியமும் இணைந்து தீவக இளையோருக்கான தலைமைத்துவ மூன்றுநாள் வதிவிட பயிற்சி முகாம் ஒன்றினை அண்மையில் நடத்தினர்.

தீவக மறைக்கோட்ட இளையோர் ஒன்றி யத்தின் இணைப்பாளர் அருட்பணி. செ. செபஜீவன் அடிகளாரின் தலைமையில் வேலணைப் பிரதேச செயலகத்தின் இளைஞர் கழக பொறுப்பாளரும் இணைந்து புனித சாட்டி சிந்தாத்திரை அன்னையின் திருத்தலத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் "இன்றைய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்" எனும் தலைப்பில் மல்லாகம் நீதிமன்ற நீதிபதி திரு. அ.ஆனந்தராசா அவர்கள் கருத்துரை வழங்கினார்.



இலங்கை கரித்தாஸ் தேசிய நிறுவனத்தின் 50வது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட விவாதப்போட்டியில் யா/ இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தை பெற்றமைக்காக இலங்கை கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் - கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் யா/ இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட மகா வித்தியாலய நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்தனர்.

23.10.2018 அன்று பாடசாலை அதிபர் அருட்சகோதரி சகாயமேரி அவர்களிடம் யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்தந்தை ச.இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் இந்நூல்களை அன்பளிப்புச் செய்ததுடன் போட்டியில் பங்கு பற்றிய மாணவிகள் வெற்றிப் பதக்கங்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## இறைவனின் பிரசன்னத்தில் 7ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
07 - 10 - 1958



விண்ணில்
06 - 11 - 2011

### அருட்தந்தை அ.சகாயநாதன்

"நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்து விட்டேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்
இனி எமக்கென வைக்கப்பட்டிருப்பது
நேரிய வாழ்விற்கான வெற்றி வாகையே"

AD91

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 06.11.2018 காலை 5.45 மணிக்கு (செவ்வாய்க்கிழமை) புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இல 105, 3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

பிரிவால் வாடும்
சகோதர சகோதரிகள்

## "விண்ணக வாழ்வில்"

### 30ம் வருடம்

பிறப்பு 22 . 02 . 1912



இறப்பு 05 . 11 . 1988

அமரர். திரு
**P. J.அமிர்தநாயகம்**
(ஆசிரியர் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி)

### 6ம் வருடம்

பிறப்பு 26 . 02 . 1924



இறப்பு 05 . 11 . 2012

அமரர். திருமதி
**அலெக்சான்ரா அமிர்தநாயகம்**
(ஆசிரியர் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்)

### 1ம் வருடம்



பிறப்பு 20.04.1958
இறப்பு 30.09.2017

அமரர். திரு
**அமிர்தநாயகம் அலோசியஸ் புஸ்பராஜா**

"ஆண்டவரின் இல்லத்தில் நான் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்" (திபா 23:6)

பண்பாய் பக்குவமாய் பாடம் புகட்டினீர்கள்
ஆசான்கள் எமக்கு நற்சான்றாய் வாழ்ந்தீர்கள்
தியாகத்தின் வரவிலக்கணமாக
தியாக இயேசுவின் சாட்சிகளாக
விசுவாசத்தின் விளை நிலங்களாக
மண்ணக வாழ்வில் மாண்புற்று வாழ்ந்தீர்கள்!
விண்ணக வாழ்வை பரிசாக இறைவன் அளித்திடுவாரே!

ஈழவிழிகள் இன்னும் காயவில்லை
இதயத்தின் வேதனைகள் இன்னும் குறையவில்லை
இறைவழ இணைந்து ஓராண்டுகள் நிறைந்ததப்பா
உமது நினைவுகள் எம்மில் வேரூன்றி உள்ளதப்பா
ஓராயிரம் வருடங்கள் ஆனாலும் உம் நினைவினிலே வாழ்ந்து
செபத்தில் இணைந்திடுவோம் அப்பா!

AD95

ஆன்ம இளைப்பாற்றி திருப்பலிகள் 05.11.2018 திங்கட்கிழமை யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் காலை 5.45 மணிக்கும், யாழ். புனித அருள் ஆச்சிரமதிதல் காலை 6.00 மணிக்கும், பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் காலை 6.00 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும்.

-குடும்பத்தினர்-

## நினைவுகளோடு கழிந்த ஐம்பது ஆண்டுகள்

மண்ணில்
15 . 07 . 1903



விண்ணில்
28 . 10 . 1968

அமரர்
### யோண் சின்னப்பு

"ஆண்டவரே எனது ஆயர்
எனக்கேதும் குறைவில்லை"
(திபா 23:1)

AD87

நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்து விட்டேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.

121.அம்பலவாணர் வீதி,
உடுவில்.

நினைவு கூருவோர்,
பிள்ளைகள்.
021 222 6463

## "நான் விழித்தெழுந்து உமது உருவம் கண்டு நிறைவு பெறுவேன்"
(திருப்பாடல் 17)

### 15ம் வருட நினைவஞ்சலி



**இராமநாதன் ஜெயசிங்கம்**
(Attorney at Law)
மண்ணுலகில்: 14.05.1945
விண்ணுலகில்: 10.11.2003

ஆண்டவன் அழைப்பில் சென்றடைந்து
ஆண்டுகள் பதினைந்து முடிந்த போதும்
ஈரவிழிகள் காயவில்லை எம்
இதய வலிகள் குறையவில்லை
கருணை கூருவாய் இறைவா!

### 31ம் வருட நினைவஞ்சலி



**ஜெயசிங்கம் சோபனா**
(Student, Holy Family Convent)
மண்ணுலகில்: 14.03.1972
விண்ணுலகில்: 19.10.1987

குழலினில் இனிய பேச்சு
குவிந்திடும் உதட்டில் ஞானம்
இறந்திட்டம் உனை ஆட்கொண்டு
ஆண்டுகள் முப்பத்தொன்றானதம்மா!
உன் நினைவில் என்றும்... இறைவா!

AD93

36. புனித அன்னம்மாள் வீதி,
பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஒளிப்படக் கண்காட்சி

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப்பின் ஏற்பாட்டில் ஒளிப்படக் கண்காட்சி யாழ்ப்பாணம் கலைத்தூது கலாமன்றத்தில் நடைபெற்றது.

இவ் ஒளிப்படக் கண்காட்சியில் 216 ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. குறித்த அமைப்பால் இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஒளிப்படம் எடுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன.

கடந்த காலத்தில் நாடு முழுவதுமுள்ள பல கிராமங்களுக்கு சென்ற இளைஞர், யுவதிகளால் எடுக்கப்பட்ட ஒளிப்படங்களே இதில் காட்சிப் படுத்தப்பட்டன.

## விண்ணக வாழ்வின் 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
01 . 08 . 1946



விண்ணில்
09 . 11 . 2014

அமரர்
### யோசவ் பிரான்சீஸ் சேவியர்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"

AD90

நினைவிலும் கனவிலுமாய் உள்ளத்தில்
உறைந்துள்ள அப்பாவே!
நான்காண்டுகள் நொடிப்பொழுதாய்
மறைந்தாலும் நீங்கள் எம்மோடு
வாழ்ந்த காலங்களின் இனிமை இன்று
போல் இருக்கிறதே
கண்ணீர் சொரிந்து அழுது நிற்கின்றோம்
இறை சன்னிதியில் இன்புற்று
இருக்க இறைவனை வேண்டுகிறோம்

-குடும்பத்தினர்-

# தேசிய குடும்ப தியானம்

தேசிய குடும்ப ஆணைக்குழுவினரின் ஏற்பாட்டில் வருடாந்த தேசிய குடும்ப தியானம் தலவில்லு புனித அன்னாள் திருத்தலத்தில் இடம்பெற்றது. இதில் 3200 பேர் கலந்து பயன்பெற்றனர். யாழ் மறை மாவட்டத்தின் குடும்ப ஆணைக்குழுத் தலைவர் அருட்பணி இராசேந்திரம் ஸ்ரலின் அடிகளார் இளவாலை, பண்டத்தரிப்பு, சில்லாலை, அச்சுவேலி, சுன்னா கம், முழங்காவில், மல்லாவி, மாங்குளம், புதுக்குடியிருப்பு ஆகிய 9 பங்குகளிலிருந்து 74 பேரை அழைத்துச் சென்றிருந்தார். இதில் பங்குபற்றியோர் அனைவரும் தமக்கு இத்தியானம் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகவும், அடுத்த வருடம் இன்னும் பல குடும்பங்களை அழைத்து வருவது நல்லது, திருமணமாகிப் பத்து வருடத்திற்கு உட்பட்ட தம்பதியரை உள்ளடக்கிய குடும்பங்கள் பங்குபற்றுவதே பொருத்தமானது என்ற கருத்தையும் வழங்கினர்.

இத்தியானத்தின்போது முழுக் குடும்ப அங்கத்தவர்களை உள்ளடக்கிய தனி அமர்வும், இளைஞர்கள், சிறுவர்களுக்கென தனித் தனி அமர்வுகளும் இடம்பெற்றது. விசேட வழிபாடுகளிலும், ஒப்புரவு அருட்சாதனத்திலும் பங்கேற்றுப் பலர் அருட்பயன் அடைந்தனர்.

## திருமண ஆயத்த வகுப்புகள்

அகவொளி நிறுவனத்தில் மாதாந்தம் இடம்பெறும் திருமண ஆயத்த வகுப்புகள் இம் மாதம் 27, 28ஆம் திகதிகளில் இடம்பெறும். பங்குத்தந்தையால் அனுப்பி வைக்கப்படுவோர் இதில் பங்கேற்கலாம்.

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே. உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தை பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

*உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்து மூன்று நாட்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையை கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும்.*
*(இச் செபத்தை பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்)*

AD92

# மூத்தோர் ஒன்றுகூடலும் சான்றோர் கௌரவிப்பும்



யாழ் குருநகர் K/68 முதியோர் சங்கத்தின் 14 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், மூத்தோர் ஒன்றுகூடலும், சான்றோர் கௌரவிப்பும் 14.10.2018 அன்று யாழ் சென் றோக்ஸ் சனசமூக நிலைய அரங்கத்தில் மூத்தோர் தலைவர் திரு.திருவம்பலம் தலைமையில் நடைபெற்றது. ஆசியுரையை யாழ் புனித மரியன்னை பேராலய பங்குத்தந்தை R.C.X நேசராஜா அடிகளார் நிகழ்த்தினார். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக உலகத்தமிழர் பேரவை தலைவரான அருட்கலாநிதி S.J.இம்மானுவேல் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ் பிரதேச செயலர் திரு.பொ.தயானந்தன் மற்றும் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக சின்மயா மிசன் சுவாமி சிதாகாசாநந்தா அடிகளார், மௌலவி எம். முகமட் யாபீர், வைத்திய கலாநிதி ஜெயலன், ஓய்வுநிலை கிராம அலுவலர் திரு.செ.யூலன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் "சேஞ்ச்" நிறுவன இயக்குநர் அருட்பணி வின்சென் பற்றிக் அமதி அடிகளார், உள சமூகச் சீராளன் கலாபூஷணம் செ.யோசப்பாலா, திரு.ந.அப்துல்கபூர், சமூகத் திலகம் க.யோகரட்ணம், சமூகத் திலகம் அ.ஏனெஸ்ற், திரு.என்.ராஜா மாஸ்டர், திரு.அ.யோச் ஆகியோர் "சாதனைச் செம்மல்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், அருட்கலாநிதி S.J.இம்மானுவேல் அடிகளாருக்கு "உலகத்தமிழ் பேரொளி" என்னும் கௌரவமும் வழங்கப்பட்டது.

## அவுஸ்திரேலியா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசியில் இருந்து இயக்கி அங்கிருந்த அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். தொடர்ந்து லோங் அடிகளாரின் கீழ் தமது கல்வியைப்பெற்றுக்கொண்ட பழைய மாணவர்களான திரு.இராஜசிங்கம் மற்றும் அருட்பணி லூயிஸ் பொன்னையா (அமதி) அடிகளார் தமது பசுமையான நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் புனித பத்திரிசியார்கல்லூரிமாணவர்களதுகலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இரண்டு கல்லூரி மாணவர்களும் தம்மிடையே கலந்துரையாடி தமது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டனர். இரு கல்லூரி மாணவக் குழுக்களுக்கு இடையேயான சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியும் நடைபெற்றது. மாணவர்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கும், உறவுகளைப் பலப்படுத்துவதற்கும் இந்நிகழ்வு காத்திரமானதாக அமைந்திருந்தது.



யாழ்ப்பாணம் மறைக்கோட்ட இளையோருக்கான ஒன்றுகூடல் பாதுகாவலன் மண்டபத்தில் மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய காப்பாளர் அருட்பணி அன்ரன் அமலதாஸ் அடிகளாரின் தலைமையில் 14.10.2018 ஞாயிற்றுக்கிழமை சிறப்பான முறையில் நடைபெற்றது.

# பெற்றோருக்கான பயிலரங்கு

பருத்தித்துறை மறைக்கோட்டத்தைச் சேர்ந்த பெற்றோருக்கான பயிலரங்கு இம்மாதம் ஆறாம் திகதி புலோலியில் இடம்பெற்றது. இக்கருத்தமர்வினை பருத்தித்துறை மறைக்கோட்டத்தின் குடும்பப்பணிப் பொறுப்பாளரும் கரவெட்டிப் பங்குத்தந்தையுமான அருட்பணி அந்தோனிப்பிள்ளை அடிகளார் ஒழுங்கு செய்திருந்தார்.

மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி அ.யாவிஸ் அடிகளாரின் செபத்தோடும் ஆரம்ப உரையோடும் ஆரம்பமானது. பிள்ளை வளர்ப்பு எனும் மையக்கருத்தில் அகவொளி இயக்குநர் அருட்பணி இராசேந்திரம் ஸ்ரலின் அடிகளாரும், அவரது உதவி ஸ யாளரும் சிறந்த வளவாளருமான இக்னேசியஸ் கிளெனியும் இணைந்து நடாத்தினர்.கருத்துரை, வீடியோப் படங்கள், கலந்துரையாடல் போன்றவற்றின் வழியாகக் கருத்துக்கள் வழங்கப்பட்டது.

பங்கு பற்றிய பெற்றோர் தங்கள் இளம் பிள்ளைகளுக்கும், ஆசிரியர்கள் தம் பாடசாலை மாணவர்களுக்கும், பிரதேச செயலகப் பணியாளர்கள் தம் பிரதேசப் பெற்றோருக்கும் இவ்வாறான கருத்தமர்வை நடத்துமாறு கோரியிருந்தனர். இயக்குநர் இதற்கு விருப்போடு சம்மதம் தெரிவித்திருந்தார்.

மற்றுமொரு பெற்றோர் பயிலரங்கு புரட்டாதி மாதம் புதுக்குடியிருப்புப் பங்கில் பங்குத்தந்தை அருட்பணி சுதர்சன் அடிகளாரால் ஒழுங்கு செய்யப்பட்டு அகவொளி நிறுவனத்தால் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களிடையே.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பின்தங்கிய மாணவர்களும் முன்னேற்றம் காண்பதற்குரிய கற்பித்தலில் ஈடுபட வேண்டும். ஆசிரியப் பணிமிகவும் சவால் நிறைந்ததொன்றாக இருப்பினும் சம்பளத்திற்காக (Salary) அல்ல சன்மானத்திற்காக (Reward) கற்பிக்க வேண்டும். ஏனெனில் உங்களது பணி மதிப்புமிக்க ஒன்றாக கருதப்படக் காரணம் நீங்கள் ஒரு குடும்பத்தை, சமூகத்தை, நாட்டை உருவாக்குகின்றீர்கள். உங்களை அறியாமலேயே பெரியதொரு சந்ததியை உருவாக்குகின்றீர்கள்.

இறைவனால் உங்களுக்குத் தரப்பட்ட இந்த அரிய அழைப்பிற்கு நன்றி கூறவேண்டும். நீங்கள் கூறுகின்ற வார்த்தைகளும் செய்கின்ற செயற்பாடுகளும் மாணவர்களுக்கு கிறிஸ்துவின் விழுமியங்களைக் கற்றுக்கொடுத்து அவர்கள் எதிர்காலத்தில் நற்சமூகமாக உருவாக வழிநடத்தும் பாரிய பொறுப்பு உங்களதே என்பதை உணர்ந்துசெயலாற்றுங்கள்எனக் குருமுதல்வர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டார். யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் முன்னெடுத்த இவ் ஒன்றுகூடலில் நூற்றுக்கும் அதிகமான ஆசிரியர்கள் சகல மறைக்கோட்டங்களிலும் இருந்து வருகை தந்து சிறப்பித்தனர். சிறப்பு விருந்தினராக அருட்கலாநிதி S.J.இம்மானுவேல் அடிகளாரும், கல்வி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1940 . 05 . 22 | 2017 . 11 . 08 |

அமரர்
**பாவிலு அன்ரனி ஜேக்கப்**

"என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"

அன்பின் இலக்கணமாய், அரவணைப்பின் உறைவிடமாய்
கள்ளமில்லா சிரிப்புடனே, நகைச்சுவை கதை பேசி
நீர் வாழ்ந்த காலங்கள், பசுமையாய் எம் நெஞ்சில்
நிலையாய் இருக்குதப்பா! விண்ணாளும் தேவன் பாதம்
விருப்புடன் சென்ற புண்ணியனே, ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எம் நெஞ்சம், உயிருள்ள காலம் வரை
உம் நினைவுடனே வாழ்வோம் அப்பா!


இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 10.11.2018 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு புனித யூதாததேயு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

(தகவல்)
மகள் - சே.மேசி
மல்லியடி, இளவாலை.

பிரிவுத்துயரில்
-குடும்பத்தினர்-

AD94

## 3ம் வருட நினைவுகளில் -----



அருட்தந்தை
இராயப்பு மரியநாயகம்
Rev.Fr.Dr.R.MARIYANAYAGAM - OMI

அன்னை மடியில் 13 . 05 . 1948
ஆண்டவன் மடியில் 23 . 10 . 2015

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே.
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்."
(யோவான் 11:25)

ஆண்டுகள் மூன்றைக் கடக்கிறது...
உங்கள் நினைவுகள் நெருங்கியே வருகின்றன.
உங்கள் நினைவு நாள் மட்டுமே
நினைவூட்டுகின்றது,
நீங்கள் மரித்துப் போனதை!
காரணம், நீங்கள் எம்முடன்
இன்றும் வாழ்கின்றீர்கள்.
அன்பான தந்தையாக,
அரவணைக்கும் தாயாக,
நம்பிக்கைக்குரிய தோழனாய்,
நல்வழிகாட்டியாய் - நற்குருவாய்
உங்கள் சுவடுகள் வாழ்கின்றன!
மறைந்தாலும் ஆகாயத்தை விட்டு நீங்காத
சூரியனைப் போல உங்கள் நினைவுகள்
எப்பொழுதும் எங்களில் இளமையாய்
செழித்திருக்கும்...!
ஆண்டவரில் இளைப்பாறுங்கள்.

AD88

என்றும் உங்கள்
அழியா நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்


## விவிலிய நாட்குறிப்பேடு 2019

உங்கள் நாளாந்த ஆன்மீக பாதைக்கு வழிகாட்டும் தோழன்

இலங்கையில் வெளியிடப்படும் ஒரே நாட்குறிப்பேடு

- வருடாந்தம் வெளிவரும் இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் திருவழிபாட்டு நாட்காட்டிக்கமைய எழுதப்பட்டது.
- முதலாம், இரண்டாம், நற்செய்தி வாசகங்களுடன் அன்றாட சிந்தனைகள்.
- இலங்கையிலுள்ள பல்வேறு மறைமாவட்டங்களை சார்ந்த குருக்கள், துறவியர்களால் எழுதப்பட்ட நற்சிந்தனைகள்.
- ஞாயிறு தினத்திற்குரிய திருப்பாடலும், பதிலுரையும்.
- தினசரி குறிப்புக்களை எழுதுவதற்கான இடைவெளிகள்.
- தினசரி புனிதர்கள் பற்றிய விபரம்.
- முழுமையான திருப்பலி செபங்கள்.

தரமான தாள்களில் நால்வர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

(இருவேறு பதிப்புக்கள் இருவேறு விலைகளில்)

220/=
300/=

011 2 320 720 / 077 803 2348
யாழ்ப்பாணம் 0766 399 114

கிளரீசியன் வெளியீட்டகம்
உங்கள் ஆன்மீகத் தோழன்

மின்னஞ்சல்: claretpu@gmail.com


இப் பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.